உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

விலை 30/=


சிவம் - 02 | விளம்பி வருடம் மாசித் திங்கள் மார்ச் 2019 | பூமி - 01

## கீரிமலை நகுலேஸ்வரபுரத்தை சுற்றுலா பகுதியாக மாற்றுவதற்கு சைவமக்கள் எதிர்ப்பு

சரித்திரப் பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு சமீபமாக காங்கேசன்துறையை நோக்கிச் செல்லும் பாதையில் கட்டப்பட்டுள்ள ஆடம்பரக் கட்டடத் தொகுதியை சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதுமட்டுமன்றி கீரிமலை - காங்கேசன்துறை வீதியிலுள்ள நிலத்தையும் கடற்படையின் தேவைகளுக்கும் சுற்றுலாத்துறை மையத்தின் அபிவிருத்திக்கும் பயன்படுத்தப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளமையை அறிந்து சைவமக்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சித்தர்களுடைய சமாதிக்கோயில், கிருஷ்ணன் கோயில், குகைக்கோயில், பாதாளகங்கை புனித தீர்த்தம் உட்பட பல சைவப் பாரம்பரியமான வரலாற்றுச் சின்னங்கள் அமைந்த இந்தப் புனித பூமியானது இதுவரை உயர் பாதுகாப்பு வலயமாகவே அமைந்திருந்தது. இங்கிருக்கும் தனியாருக்குச் சொந்தமான நிலங்களை மீட்பதற்காக அதன் உரிமையாளர்களான பொதுமக்கள் பல தடவைகள் வலி.வடக்கு பிரதேச செயலாளருக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது கோரிக்கைகளை முன்வைத்துவிட்டு காத்திருந்த நிலையில் இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இதுவிடயம் தொடர்பாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்து சமய விவகார அமைச்சர் மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்கள் உடனடியாக தலையிட்டு, சரித்திரப் பிரதிபெற்ற ஆலய சுற்றாடலை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சைவ மக்கள் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் தவத்திரு போதிநாத வேலன் சுவாமிகள் யாழ்.வருகை

## இலங்கைப் பிரதமர் திருப்பதியில் தரிசனம்



இலங்கைப் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அண்மையில் இந்தியா திருப்பதி ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் ஆலயத்திற்கு வழிபாட்டிற்காகச் சென்றிருந்தபோது தனது நிறை அளவு பொன்னை காணிக்கையாக வழங்கியிருந்தார்.

## வடமாகாணத்தில் பதினான்கு பாடசாலைகள் தரமுயர்வு



வடமாகாணத்தில் 14 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படவிருப்பதாக தெரியவருகிறது. வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் இராகவன் அவர்கள் இதற்கான கோரிக்கையை அரசிடம் முன்வைத்துள்ளார். ஏனைய எட்டு மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடமாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை குறைந்த வீதத்திலேயே காணப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. விரைவில் பாடசாலைகளின் தரமுயர்வு சாத்தியமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Email - sivapoomiprinters@gmail.com
தொலைபேசி - 021 222 7938

## முறிகண்டியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் அகில இலங்கை இந்து மாமன்ற வன்னிப் பிராந்திய நிலையம்







நாவற்குழி திருவாசக அரண்மனையில் சிவராத்திரி விழா

## யாழ்ப்பாணத்தில் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் ஓராண்டு நினைவு








## உலகில் தலைசிறந்த ஆசிரியர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட



யசோதை
செல்வக்குமாரன்

(விபரம் உள்ளே)

# சிவபூமி

சிவம் - 02 மார்ச் 2019 பூமி - 01



### சிந்தனை செய்வோம்

## கல்வித்துறை சார்ந்த பொது நிகழ்வுகளில் ஆசிரியர்களது பங்களிப்பு தேவை

யாழ்ப்பாணத்தில் என்றும் இல்லாதவாறு ஆசிரியத்துவம் தொடர்பான விமர்சனங்கள் அதிகரித்துச் செல்கின்றன. போருக்கு முன் ஆசிரியர்களின் தூய சேவையினால் சமூகம் உன்னத வளர்ச்சி பெற்றமையை பலரும் பாராட்டியிருக்கிறார்கள். தமிழர்களின் வாழ்வில் பெரும் செல்வமாக விளங்கியது கல்வியே. இதன் முன்னேற்றத்தில் அன்றைய ஆசிரியர்களின் பங்களிப்பு மிகுந்த அர்ப்பணிப்பானது. காலை பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள் பொழுது மறையும்வரை அர்ப்பணிப்போடு சேவையாற்றினர். இன்று காலச்சூழலால் இப்பண்பாடு அருகிவருகிறது.

பிரத்தியேக வகுப்புக்களுக்கு சமூகம் முக்கியத்துவம் கொடுத்ததினால், பாடசாலை ஆசிரியர்களிடம் முழுமையான பயனைப் பெறுவதில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் எமது மாகாண கல்வி நிலைமை பாதிக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர்களும் தங்கள் அறிவு வளத்தை வெறும் கற்கைச் சான்றிதழ்களோடு மட்டும் பூர்த்தி செய்பவர்களாக தற்போது விளங்குகின்றனர். பொதுவான சமூகம் சார்ந்த விஷயங்களை தேடி அறிவதில் அக்கறை கொள்வதில்லை.

ஒரு காலத்தில் யாழ்ப்பாண ஆசிரியர்கள் பொது நிகழ்ச்சிகளிலே முன்னணியில் நின்று செயற்பட்டார்கள். சிறந்த படைப்பாளிகளாகவும், சிறந்த பேச்சாளர்களாகவும், சிறந்த அரசியல் அறிவுடையவர்களாகவும் ஆசிரியர்கள் விளங்கினர். சமூக நிகழ்ச்சிகளுக்கு ஆசிரியர்களே தலைமைதாங்கினர். இன்று இந்நிலை இல்லை.

பாடசாலை கடமை நேரத்தோடு தமது பணியை முடிப்பவர்கள் அதிகமாகிவிட்டது. ஆசிரியர்கள் தாம் சார்ந்த துறை தொடர்பான வைபவங்களுக்கு தற்போது வருவது மிகவும் குறைவு. இலக்கிய விழா, இசை விழா, அரசியல் ஆய்வரங்கு எதிலுமே ஆசிரியர் கலந்துகொள்வது மிகவும் அரிதாகிவிட்டது. இசை ஆசிரியர்களே இசை விழாக்களுக்கு பெரும்பாலும் சமுகம் தருவதில்லை. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழ் விழாக்களுக்கு வருவதில்லை. இந்த நிலையில் மாணவர்களிடையே எப்படி அறிவையும் சமூக உணர்வையும் ஆசிரியர்களால் வழிப்படுத்த முடியும்? என்ற வினா, பொதுவாக இப்போது சமூகத்தில் பேசுபொருளாக உள்ளது.

### இந்துக்களின் விரத நாட்களும் விசேட தினங்களும் (மார்ச் 2019)

| | | | |
|---|---|---|---|
| 02 | சனி | : | ஏகாதசி விரதம் |
| 03 | ஞாயிறு | : | பிரதோஷ விரதம் |
| 04 | திங்கள் | : | மகா சிவராத்திரி |
| 06 | புதன் | : | அமாவாசை விரதம் |
| 10 | ஞாயிறு | : | சதுர்த்தி விரதம் |
| 12 | செவ்வாய் | : | கார்த்திகை விரதம், சஷ்டி விரதம் |
| 17 | ஞாயிறு | : | ஏகாதசி விரதம் |
| 18 | திங்கள் | : | பிரதோஷ விரதம் |
| 20 | புதன் | : | பூரணை விரதம் |
| 21 | வியாழன் | : | பங்குனி உத்தரம் |
| 24 | ஞாயிறு | : | சங்கடஹர சதுர்த்தி |

### அன்பார்ந்த சிவபூமி வாசகர்களுக்கு,

வணக்கம். கடந்த வருடம் (2018)மார்ச் மாதத்திலிருந்து செய்திப் பத்திரிகையாக வெளிவரத்தொடங்கிய 'சிவபூமி' ஓராண்டை நிறைவு செய்திருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இரண்டாவது ஆண்டின் முதலாவது இதழ் இப்போது உங்கள் கரங்களில் தவழ்ந்துகொண்டிருக்கிறது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் 'சிவபூமி' முதலாவது பிரதியைப் பெற்றுக்கொண்டு எமக்கு ஆசி வழங்கியிருந்தார். கோப்பாய் கிராமத்தைச் சேர்ந்தவரும், ஹவாய் சைவ ஆதீனத்தில்



## விநாயகர் வணக்கம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்!

இறைபணியாற்றி வருபவருமான ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் அனுசரணையுடன் 'சிவபூமி' முதலாவது இதழை வெளியிட்டிருந்தோம்.

தவத்திரு சிவயோக சுவாமிகளின் 55ஆவது குருபூசை நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இப்போது யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள், 'சிவபூமி' - இரண்டாவது ஆண்டின் முதலாவது இதழைப் பெற்றுக்கொள்கிறார். இதனை ஒரு பெரும் பேறாகவே கருதுகிறோம். தவத்திரு சிவயோக சுவாமிகளின் 55ஆவது குருபூசை சிறப்பிதழாக இது மலர்ந்துள்ளது. ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் அனுசரணையுடன் இந்த இதழும் வெளியாகிறது.

இந்து சமயம், சமூகம், கல்வி சார்ந்த விஷயங்களை தாங்கிய வண்ணம் குறிப்பாக சமயக் கட்டுரைகள் இலக்கிய தகவல்கள் கவிதைகள் ஆலய உற்சவங்கள் தொடர்பானதும், சமய நிகழ்வுகள் மற்றும் பொது விடயங்கள் சம்பந்தப்பட்டதுமான செய்திகள், படங்கள், இந்துக்களின் விசேட தினங்கள் தொடர்பான சிறப்புக் கட்டுரைகள், சமய வரலாற்றுத் தகவல்கள் போன்ற பல விஷயங்களை கடந்த ஓராண்டு காலத்தில் 'சிவபூமி' ஊடாகத் தந்துள்ளோம்.

ஆலயங்களின் அறங்காவல் சபையினர், பரிபாலன சபையினர் மற்றும் ஆலய பிரதம குருமார்கள் தங்கள் ஆலய உற்சவங்கள் தொடர்பான பிரசுரங்களை அல்லது ஆலய கடிதத் தலைப்பில் அத்தகைய விபரங்களை எழுதி அனுப்பிவைத்தால், அவற்றை 'சிவபூமி' பத்திரிகையில் வெளியிடுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

கடந்த ஓராண்டு காலத்தில் அவ்வப்போது சிறப்பிதழ்களையும் வெளியிட்டுள்ளோம். இந்து மக்களாகிய நீங்கள் தந்த ஆதரவும், ஒத்துழைப்பும் கடந்த காலத்தில் 'சிவபூமி' பத்திரிகையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு பேருதவியாக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. எதிர்காலத்திலும் 'சிவபூமி' யின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உங்களது முழுமையான பங்களிப்பை தொடர்ந்து வழங்குவீர்கள் என்பது எங்கள் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்.

**– சிவபூமி அறக்கட்டளை**

## கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தில் சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் மற்றும் ஆதீன துறவிகள் உட்பட உலகின் பல பாகங்களையும் சேர்ந்த அடியவர்கள் அனைவரும் கடந்த 16ஆம் திகதியன்று கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தில் நடந்த சிறப்பு பூசை வழிபாட்டில் கலந்து கொண்டனர். ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மேற்படி சிறப்பு வழிபாட்டு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

## சிவயோக சுவாமிகளின் குருபூசையில் ஹவாய் சைவ ஆதீன முதல்வர்

இம்மாதம் 19ஆம் திகதியன்று பகல் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள் ஆச்சிரமத்தில் சுவாமிகளது 55 ஆவது குருபூசை வைபவம் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வின்போது அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருந்த ஹவாய் சைவ ஆதீன முதல்வர் மற்றும் ஆதீன துறவிகள் உட்பட உலகின் பல பாகங்களையும் சேர்ந்த அடியவர்கள், ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் இந்து மக்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.

அதேதினம் காலை 7.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய தேரடியில் இடம்பெற்ற விசேட பூசை கூட்டுப் பிரார்த்தனை என்பனவற்றைத் தொடர்ந்து சிவயோக சுவாமிகளின் திருவுருவப்படம் தாங்கிய அலங்கார ஊர்தியுடன் பாதயாத்திரை ஆரம்பமானது. ஹவாய் சைவ ஆதீன முதல்வர், அவருடன் வருகை தந்திருந்த அடியவர்கள் உட்பட இங்குள்ள இந்துமக்களும் பாதயாத்திரை குழுவில் இணைந்து கொண்டார்கள். பாதயாத்திரை குழுவினர் காலை 9.45 மணியளவில் கொழும்புத்துறை ஆச்சிரமத்தை சென்றடைந்ததும், அங்கு குருபூசை வைபவம் ஆரம்பமானது.

## ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் யோகர் சுவாமிகள் குருபூசை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் யோகர் சுவாமிகளின் 55ஆவது குருபூசை வைபவம் இம்மாதம் 18ஆம் திகதியன்று காலை 10.00மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது சிறப்புச் சொற்பொழிவு, நற்சிந்தனைப் பாடல் என்பன சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன.

## அமரர் வி.கயிலாசபிள்ளை அவர்களது ஈராண்டு நினைவுப் பேருரை



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் மனிதநேயமாமணி அமரர் வி.கயிலாசபிள்ளை அவர்களின் இரண்டாவது வருட நினைவு நிகழ்வு கடந்த மாதம் (பெப்ரவரி) 23ஆம் திகதியன்று காலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்து மாமன்றத் தலைவர் திரு.மா.தவயோக ராஜா அவர்களது தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வை மாமன்ற பொதுச் செயலாளர் திரு.வே.கந்சாமி அவர்கள் தொடக்க உரையாற்றி ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அஷராத்மானந்தா அவர்கள் சிறப்பு அதிதியாகவும், மாமன்ற உப தலைவரும், யாழ். இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

தமிழ்நாடு முனைவர் வே.சங்கரநாராயணன் அவர்கள் 'பெரியபுராணம் கூறும் வாழ்வியல்' எனும் பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

## அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களது ஓராண்டு நினைவு நிகழ்வு

### யாழ்ப்பாணத்தில்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அறநெறிக்காவலர் கந்தையா நீலகண்டன் அவர்களது ஓராண்டு நினைவு நிகழ்வு மாமன்ற யாழ். பிராந்திய பணிமனை மற்றும் சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கடந்த மாதம் (பெப்ரவரி) 20ஆம் திகதியன்று மாலை நல்லூரிலுள்ள மாமன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாமன்ற உப தலைவரும், மாமன்ற யாழ்.இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநருமான கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனம் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் பிரார்த்தனை உரை வழங்கினார்கள்.

கொழும்பிலிருந்து வருகைதந்திருந்த திருமதி சசிதேவி நீலகண்டன் அவர்களும், புதல்வர் திரு.நீலகண்டன் பிரணவன் அவர்களும் அவரது குடும்பத்தினரும் அமரர் நீலகண்டன் அவர்களது உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தார்கள்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் 'போருக்குப் பின் இலங்கையில் சைவசமயம்' என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

### கொழும்பில்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களின் ஓராண்டு நினைவு நிகழ்வு, அன்னாரின் குடும்பத்தினரின் ஏற்பாட்டில் இம்மாதம் 10ஆம் திகதியன்று காலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி அஷராத்மானந்தா, அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் கிறிஸ்தவ மத அருட்தந்தை ஆகியோரின் பிரார்த்தனை உரைகளும், கலாநிதி ஆறு.திருமுருகன், திரு.கனக ஈஸ்வரன் (சட்டத்தரணி) திரு.ஆர்.சில்வா (சட்டத்தரணி) ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

அமரர் நீலகண்டன் அவர்களது மறைவின் ஓராண்டு நிறைவு சிறப்பு மலரொன்றும் அன்னாரின் குடும்பத்தினரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

### அமரர் நீலகண்டன் நினைவுப் பேருரை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இம்மாதம் 16ஆம் திகதியன்று கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நினைவுப் பேருரை இடம்பெற்றது.

மாமன்றத் தலைவர் திரு.மா. தவயோகராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். சென்னை விவேக பாரதி நிறுவுனர் சிந்தனைச் செம்மல் ஆர்.வி.பி. சுப்பிரமணியன் 'இன்றைய நிலையில் எமது சமயக் கடமைகள்' என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றினார்.

ஓராண்டு நினைவு தினம் (14.03.2019)

## அமரர் திருமதி வசந்தா வைத்தியநாதன்



ஈழத்து சைவத்தமிழ் உலகில் பலராலும் அறியப்பட்ட திருமதி வசந்தா வைத்தியநாதன் அம்மையார் மறைந்து ஓராண்டு நிறைவுபெறுகிறது.

இவர் சிறந்த சமயச் சொற்பொழிவாளராகத் திகழ்ந்தவர். பல சமய இலக்கிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அகில இலங்கை கம்பன் கழகத்தின் புரவலர்களில் ஒருவராக விளங்கியவர்.

## கிளிநொச்சி மாணவிகள் சாதனை

கடந்த மாதம் (பெப்ரவரி) 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை இந்தியா கர்நாடக மாநிலத்திலுள்ள பெல்கம் என்ற இடத்தில் இடம்பெற்ற ஆசிய றோல் போல் போட்டியில் இலங்கை அணி மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை அணி சார்பாக கிளிநொச்சி உருத்திரபுரம் சக்திபுரத்தைச் சேர்ந்த செல்வி.விதுஷா நடராசா, செல்வி சோபிகா தினகராஜா ஆகிய இரு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். இவர்கள் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பாடசாலை அணியில் விளையாடி கிளிநொச்சி மாவட்ட அணிக்கு தெரிவுசெய்யப்பட்டு, அந்த அணியிலும் சிறப்பாக விளையாடியதால், இலங்கையின் தேசிய றோல் போல் அணியிலும் இடம்பிடித்து தங்களது திறமையை வெளிக்காட்டியிருந்தனர். இதன் காரணமாக சர்வதேச போட்டிக்காக தெரிவுசெய்யப்பட்டு, அதில் கலந்துகொண்டு வெற்றியீட்டி சாதனையாளர்களாக திரும்பி இருக்கிறார்கள். செல்வி விதுஷா நடராசா சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டிருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

## சைவ சித்தாந்த இரத்தினம் பட்டமளிப்பு விழா

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் இம்மாதம் 3ஆம் திகதியன்று சைவ சித்தாந்த இரத்தினம் பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வினபோது, திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த மையம் நடத்திய சைவ சித்தாந்த வகுப்பில் பங்குபற்றி கல்வியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

## நாவற்குழி திருவாசக அரண்மனையில் சிவராத்திரி சிறப்பு பூசை, வழிபாடுகள்

நாவற்குழி திருவாசக அரண்மனை வளாகத்தில் அமைந்துள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலில் இம்மாதம் 4ஆம் திகதியன்று சிவராத்திரி சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அன்றைய தினம் பகலும், இரவும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் 108 சிவலிங்கங்களுக்கும் ஏராளமான அடியார்கள் தங்கள் கரங்களால் நீர் அபிஷேகம் செய்துகொண்டமை சிறப்பான நிகழ்வாக அமைந்திருந்தது. இரவு நான்கு சாமமும் விசேட அபிஷேகங்களும் இடம்பெற்றன.

## கீரிமலை சிவபூமி மடத்தில் சிவராத்திரி விழா

இம்மாதம் 4ஆம் திகதி சிவராத்திரி தினத்தையொட்டி இரவு கீரிமலை சிவபூமி மடத்தில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு, மற்றும் வீரபத்திரர் வசந்தன் கூத்து, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயானகாண்டம் இசை நாடகங்கள், காவடி ஆட்டம், இசை நடன நிகழ்ச்சி என்பன சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன.

## இணுவையூர் ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன் அகவை எழுபது நிகழ்வு

எழுத்தாளரும், ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தருமான இணுவையூர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களின் அகவை எழுபது நிறைவு விழாவும், அவரது 'மறைந்தும் மறையாதவர்கள் - பாகம் 2' நூல் வெளியீடும் இம்மாதம் 9ஆம் திகதியன்று மாலை கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.


இந்த வைபவத்தின்போது வெளியிடப்பட்ட 'இரகுபதி எழுபது' என்ற நூலும் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் விழா

யாழ். தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இம்மாதம் 9ஆம் திகதியன்று மாலை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் திருவள்ளுவர் விழா நடைபெற்றது. செந்தமிழ்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது தமிழ்நாடு இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நாவலர் நல்வாக்கு

# காலம்



காலம் என்பது உலகம் நடைபெறுதற்கு முக்கிய காரணமாயுள்ளது. காலத்தை நம்மவர்கள் மிகக்குறைந்த பிரமாணமுள்ள நிமிஷம் முதலாக மேன்மேற் கூடின பிரமாணம் உள்ளவர்களாகப் பகுத்து வரையறை செய்து, அவைகளுக்கு ஒவ்வொரு பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவைகளின் பெயர்கள் நிமிஷம், காஷ்டை, கலை, நாழிகை, முகூர்த்தம் என்னும் இவை முதலாயினவாம். ஆங்கிலேயர்கள், இந்தக் காலத்தை செக்கன்டு, மினிட்டு, மணி என்பனவாக வெவ்வேறுவகைப்பட அளவுசெய்து, பெயர் கொடுத்து வழங்குகின்றார்கள். நமக்கு இரண்டரை நாழிகை நேரம் ஆங்கிலேயர்களுக்கு ஒருமணி எனப்படும். இப்படிக் கணக்கிடும்பொழுது, ஆங்கிலேயர்களுடைய இருபத்து நான்கு மணிநேரம் நமக்கு அறுபது நாழிகை ஆகிறது. இந்த அறுபது நாழிகையில், சூரியோதயம் முதலாக முன் முப்பது நாழிகையும் பகல் என்றும், சூரியாஸ்தமயனம் முதலாக பின் முப்பது நாழிகையும் இரவு என்றும், இந்த இரண்டும் சேர்ந்து ஒருநாள் என்றும், வழங்கப்படும். நாள், வாரம், மாசம், வருஷம் என்னும் இவைகளைப் பெரும்பான்மையும் இந்தியர்களைப் போலவே ஆங்கிலேயரும் கொள்வர்.

இப்படிக் காலத்தைப் பகுத்துக்கொண்டது, நாம் செய்யுந் தொழில்களெல்லாம் அது அது முற்றுப்பெறவேண்டிய அளவில் முற்றுப்பெறுதற பொருட்டாம். கால்தைதப்பற்றிச் சிந்தியாவிட்டால், ஒருவரும் ஒரு தொழின் முயற்சியும் செய்யாது கெடுவர். காலம் அருவமாயிருப்பினும், அது நமக்கு மிகவம் உபயோகியாயிருக்கிறது. அதனுடைய கழிவையும், கழிந்த அது நமக்குப் பின்னே கிடைத்தல்வேண்டும். எப்படியெனில், ஒருவித்தியாசாலையிற் காலை எட்டுமணிக்கு வந்து கல்வி கற்க வேண்டிய ஒரு மாணாக்கன், ஒன்பது மணிக்கு வருவானேயானால் முதல்மணியிற் கற்பித்த பாடங்களை இழந்து அந்த இழந்த காலத்துக்காகக் கவலைப்படுகின்றான். இழந்த ஒரு மணிநேரமும் பின் அவனுக்குக் கிடைப்பதேயில்லை.

இப்படிக் காலத்தைக் குறித்து நாம் நினைக்கிறதினாலே எங்களுடைய மனமொழி மெய்கள் தத்தம் தொழில்களைச் சோம்பலின்றிச் செய்து நல்வழிப்பட, அதனால் இம்மை மறுமை இன்பங்களைத் தப்பாது அடையலாம். அளவிறந்த பரமாணுக்கள் ஒருங்கு திரண்டு மலைகளாதல்போல, அநேக நிமிஷங்கள் ஒருங்கு சேர்ந்து வருஷங்களாகின்றன. அவைகள் கழியக் கழிய நம்முடைய ஆயுசும் கழிகிறது.

காலத்தை வரையறை செய்து கொள்வதற்காகக் கடவுளாற் கொடுக்கப்பட்ட கருவிகள் சூரியன் முதலான கிரகங்கள். அவைகளை ஆதாரமாகக் கொண்டு மனிதர் காலவரையறை செய்து கொள்ளுங் கருவிகள் கடிகாரங்கள். கடிகாரம் வைத்திருப்பது தொழின் முயற்சிக்கும் சுறுசுறுப்புக்கும் ஏதுவாயிருக்கும்.

சுகநலம் பெற பிரார்த்திக்கின்றோம்

# பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்



பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் நாடறிந்த இலக்கிய சமயச் சொற்பொழிவாளர், பட்டிமன்றப் பேச்சாளர், கதாப்பிரசங்கக் கலைஞர். சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறையின் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

இவர் தமிழ் இலக்கியம் மற்றும் சமயத்துறை சார்ந்த பல நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதுடன் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் ஏராளமான கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். ஈழநாடு நாளிதழிலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சமய நிகழ்ச்சிப் பிரிவிலும் கடமையாற்றியிருப்பதன் மூலம் ஊடகத்துறையிலும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

பேராசிரியர் நாகேஸ்வரன் அவர்கள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர். யாழ்.பல்கலைக்கழகத்தில் பயின்று 1979ஆம் ஆண்டில் கலைமாணி (தமிழ் சிறப்பு) பட்டத்தையும், பின்னர் 1988ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டத்தையும், 2008ஆம் ஆண்டில் கலாநிதி பட்டத்தையும், 2015ஆம் ஆண்டில் பேராசிரியர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

இவர் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய பரம்பரை அறங்காவலராகவும் இருக்கிறார். தற்பொழுது உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றுவரும் இவரது சுகநலத்திற்காக இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

– சிவபூமி அறக்கட்டளை

நினைவலைகள்

# மாணவர்களின் சுபீட்ச வாழ்வுக்கு வித்திட்ட பேராசான்

*கலாநிதி ஆறு.திருமுருகன்*

**சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்கள் மறைந்து மார்ச் 13ஆம் திகதியன்று ஒரு மாதம் நிறைவுபெறுகிறது.**

இருபத்தோராவது நூற்றாண்டு கால ஈழத்து சைவசமய வரலாற்றில் சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்களின் நாமம் என்றும் பேசப்படும் என்பதில் ஐயமில்லை. சைவப் பாரம்பரியமிக்க குப்பிளான் கிராமம் பெற்ற அருமைந்தனாகிய இவர் சைவ சமயத்தின்மீது அபரிதமான பற்றோடு வாழ்ந்தவர். பேச்சாற்றல், எழுத்தாற்றல் மிக்க இவர் திருமுறைகள் மீதும், சைவசமய தத்துவங்கள் மீதும் ஆழ்ந்த புலமையுடையவராக திகழ்ந்தார். கடந்த நாற்பது ஆண்டு காலமாக தனது கிராமத்திலும், பிற ஊர்களிலும் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றி மக்களை நெறிப்படுத்தியவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டவர். அதிபர் என்.சபாரத்தினம் அவர்களின் பிரியத்துக்குரிய மாணவனாக விளங்கினார். சிறந்த ஆசிரியராக கற்பித்தல் பணியில் ஈடுபட்ட இவர், பல மாணவர்களின் சுபீட்ச வாழ்வுக்கு வித்திட்டார்.

கணித பாடத்திலும், சிறந்த விற்பன்னராக விளங்கிய இவர், தனது கிராமத்தில் பலர் கணித பாடம் சித்திபெறுவதற்கு பேருதவி புரிந்துள்ளார். இந்து நாகரிகம், இந்து சமயம் போன்ற பாடங்களை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்பிப்பதில் சிறந்த வல்லுநராக விளங்கினார்.

இவரிடம் கற்ற மாணவர்கள் இன்று பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பிரதேச செயலர்கள் போன்ற பல்வேறு உயர் பதவிகளை வகித்து வருகிறார்கள். பலரது மேடைப் பேச்சுக்கான வாய்ப்பு, இவர் ஆசிரியராக, விரிவுரையாளராக விளங்கிய காலத்தில் இவரது வழிகாட்டலில் கிடைத்துள்ளது. இவரது மைந்தர்கள் இன்று கல்வி உலகில் பெருமை மிக்கவர்களாக திகழ்கிறார்கள்.

அமரர் சிவ.மகாலிங்கம் அவர்கள் செய்த சேவை எதுவும் வீண்போகவில்லை. தான் பிறந்த கிராமத்தின் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். குறிப்பாக, யாழ்.இந்துக் கல்லூரி தன் பண்பாட்டு மரபுகளை என்றும் மீறக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையாக செயற்பட்டவர். நல்லைநகர் நாவலர்மீது எல்லையற்ற பக்தி கொண்டவராக விளங்கியவர். இவரின் பேச்சாற்றலை அறிந்து லண்டன், கனடா போன்ற வெளிநாடுகளில் வாழும் எம் மண்ணைச் சார்ந்தவர்கள் அங்கு இவரை அழைத்து கௌரவித்துள்ளனர். இவரின் சேவையைப் பாராட்டி பல விருதுகளை சமூகம் இவருக்கு வழங்கியுள்ளது. இவர் ஆற்றிய திருமந்திர உரையை செவிமடுத்த பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் இவருக்கு சிவத்தமிழ்வித்தகர் என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 66ஆவது பிறந்ததின விழாவில் இவருக்கு சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



சைவ சித்தாந்தத்தில் முதுமாணிப் பட்டம்பெற்ற இவர், தொடர்ந்து பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின்மீது மிகுந்த ஆர்வம் கொண்டு உழைத்தார். ஆச்சிரம வைபவங்களில் சிறந்த உரைகளை ஆற்றி நேசித்தார். தனது தாய், தந்தையினர் நினைவாக ஆண்டுதோறும் ஆச்சிரமத்தில் அன்னதானம் வழங்கி சிறப்புச் செய்தார்.

யாரும் எதிர்பாராத நிலையில் திடீரென சுகயீனமடைந்து வைத்தியசிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இறைவனின் அழைப்பு வந்து விட்டது. இவரது பிரிவுச் செய்தியை மைந்தன் அரவிந்தனின் முகநூல் வழியாக அறிந்து திடுக்குற்றேன். என் செய்வது? இறைவனின் நியதியை யார் வெல்ல முடியும்?

பலருக்கு பயன்தந்து கொண்டிருந்த ஒரு விருட்சம் திடீரென சரிந்துவிட்டது, நினைத்துப் பார்க்க முடியாது. இன்னும் எவ்வளவோ காலம் வாழ வேண்டியவர். நாம் செய்த தவக்குறைவு ஒரு நல்ல சைவ சீலரை இழந்துவிட்டோம்.

## சிவபூமி பாடசாலையில் யாழ். இந்து மாணவர்கள்

கோண்டாவில் சிவபூமி பாடசாலைக்கு கடந்த மாதம் (பெப்ரவரி) 14ஆம் திகதியன்று யாழ். இந்துக் கல்லூரியின் 11ஆம் தரம் மாணவர்கள் வருகை தந்து, இங்கு கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களுடன் இணைந்து சிறப்பு நிகழ்ச்சிகளை நடாத்தி மகிழ்வித்தனர்.

# நெஞ்சில் நிறைந்த அமரர் நீலகண்டன் ஐயா

சு.பாலசிங்கம், இலண்டன்

திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் நம்மை விட்டுப்பிரிந்து ஒருவருடம் மறைந்துவிட்டது. ஒருவரின் சேவைக்காலம் முக்கியமல்ல, அவரது தரம்தான் முக்கியமானது. திரு.நீலகண்டன் அவர்கள் பல துறைகளில் பலருக்கு பலவிதங்களில் உதவி செய்துள்ளார். நான் முதலில் அவரை கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் கல்முனையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஓர் இல்லம் அமைப்பதற்கு அவரது உதவியை நாடியது. எதுவித எதிர்பார்ப்பும் இன்றி, முழுமனதுடன் தன்னால் இயன்ற உதவியை செய்து தந்தார்.

திரு.நீலகண்டன் அவர்கள், தனது அரைவாசி நேரத்தை இலங்கையில் அறப்பணிகளுக்காக செலவிடுவதை அவதானித்தேன். அவர் கோப்பாயிலுள்ள நவமங்கை நிவாசம் அறக்கட்டளை அமைப்பதற்கு எங்களுக்கு உதவினார். இலண்டனிலுள்ள தமிழர்களும் கோயில்களும் சேர்ந்து நல்லை ஆதீனத்தை அமைப்பதற்கு முயற்சித்தோம். இலங்கையிலுள்ள நம்பிக்கையான நிறுவனம் அகில இலங்கை இந்து மாமன்றத்தை தெரிவு செய்து, நீலகண்டன் ஐயா அவர்களின் மேற்பார்வையில் இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

பெரும் பணச்செலவில் நல்லை ஆதீனக் கட்டடம் அமைக்கப்பட்டது. பணம் இலண்டனிலிருந்து அனுப்பிய போதும், நீலகண்டன் ஐயா, திரு.ஆறு.திருமுருகன் ஆகியோரது விடா முயற்சியாலும், கட்டடக் கலைஞர் அமரர் க.சண்முகநாதன் அவர்களின் திறமையாலும் ஆதீனம் உருவாக்கப்பட்டது. இம்மூவரின் ஒத்துழைப்பு இல்லாவிடில், இன்று இலங்கையில் சைவத்தமிழ் மக்களுக்கு பெரியதொரு கட்டடத்தில் ஆதீனத்தை அமைத்திருக்க முடியாது. அடிக்கல் நாட்டிய நாளிலிருந்து திறப்புவிழா வரை திரு.நீலகண்டன் அவர்கள் வாரத்தில் மூன்று தடவைகளாவது என்னுடன் கட்டட விஷயம் பற்றி பேசுவார். இரவு பதினொரு மணியளவிலும் தொலைபேசியில் அழைத்தாலும் உடனே பேசுவார். என்னை, இலண்டன் வாழ் இந்து மக்கள் நல்லை ஆதீன கட்டடக் குழுவுக்கு தலைவராக நியமித்தபோது, கட்டடம் நல்லமுறையில் பூர்த்தியாகும் என உறுதி கூறினார். இறைவன் அருள் கைகூட, அன்னாரின் விடாமுயற்சியால் ஒரு வருடத்தில் தேவையான பணம் சேர்ந்தபோதும், கட்டடக் கலைஞருக்கு கொடுக்கவேண்டிய நான்கு இலட்சம் ரூபா பற்றாக்குறை ஏற்பட்டது. அப்போது நீலகண்டன் ஐயா தானாக முன்வந்து, அந்தப் பற்றாக்குறை பணத்தை இந்து மாமன்றத்தின் மூலம் கொடுத்து ஆதீன கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்தார். அவரது இந்த உதவியை இலங்கை - இலண்டன் தமிழ் மக்கள் என்றும் நினைவு கூருவார்கள்.



அடுத்து, இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கம் நாற்பதாவது ஆண்டில், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள நாற்பது மணமக்களுக்கு திருமணம் செய்து வைக்க தீர்மானித்தது. அன்னாரின் ஆசியுடன் இந்து மாமன்ற உப தலைவர் திரு.தனபாலா இந்தப் பணியை சிறப்புற நடாத்துவதற்கு உதவியிருந்தார். திருமணத்தன்று அன்னார் மிகவும் சுகயீனமாக இருந்தபோதும், காலை 7.00மணியளவில் பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் கோயிலுக்கு வருகைதந்து கலந்துகொண்டார். திருமதி கயிலாசபிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஓரிரு மணிகளின் பின், வீடு திரும்பினார். ஆனால், திரும்பவும் கோயிலுக்கு வந்து, நிகழ்ச்சி முடியும்வரை அங்கு நின்று, இலண்டனிலிருந்து வந்திருந்த அனைவரையும் ஒவ்வொருவராகக் கௌரவப்படுத்திவிட்டு வீடு திரும்பினார். இதுதான் நான், அவரை இறுதியாகச் சந்தித்த நாள்.

அமரர் நீலகண்டன் ஐயா சைவ மாநாட்டுக்கு இலண்டன் வந்தபொழுது திரு.ஆறு. திருமுருகனுடன் எனது வீட்டில் தங்கினார். பலர் கேட்டும் வேறு இடத்தில் தங்குவதற்கு மறுத்துவிட்டார். என் வீட்டிலிருந்து திரும்பும்போது ஒரு சொந்த சகோதரராக தன்னை உபசரித்ததற்கு நன்றி தெரிவித்து சென்றது இன்றும் என் நினைவில் இருக்கிறது.

அமரர் நீலகண்டன் ஐயாவின் முதலாவது வருட நினைவுப் பேருரைகள் நடத்தப்பட்டு வருவது மனநிறைவைத் தருகிறது. அன்னாரின் இறுதிக் கிரியையின்போது எனக்கும் அஞ்சலி உரை நிகழ்த்த கிடைத்த சந்தர்ப்பம் மனநிறைவைத் தந்தது. இதற்காக அன்னாரின் மனைவி, பிள்ளைகளுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**21.03.2019**

# பங்குனி உத்தரம் - சிறப்பும் மகிமையும்

பங்குனி உத்தரம் என்பது சைவக் கடவுளாகிய முருகனுக்குரிய சிறப்பு விரத தினமாகக் கொண்டாடப்படுகிறது. இது பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திர தினமாகும். தமிழ் மாதங்களில் 12ஆவது மாதம் பங்குனி. நட்சத்திரங்களில் 12ஆவது நட்சத்திரம் உத்தரம். எனவே வேலவனுக்குச் சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகிறது. அநேகமான முருகன் கோயில்களில் இத்தினத்தில் வருடாந்த திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம்.

சிவனுக்கும் பார்வதிக்கும் சோமசுந்தரர் என்றும் மீனாட்சி என்றும் நாமம் கொடுத்து மணம் செய்வித்த நாளும் பங்குனி உத்தர நட்சத்திர தினமாகும். சிவனின் மோன நிலையைக் கலைத்த மன்மதனை எரித்ததால் கலங்கி நின்ற தேவர்களுக்கு ஆறுதல் வார்த்தையாக சிவன் தேவியை இத்தினத்தில் மணந்தார் என்பது ஐதீகம்.

இத்தினத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் ஆடை அணிகளால் அழகுசெய்து மணவறையில் அமர்த்தி வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் ஓதி, ஹோமம் வளர்த்து, தோத்திரங்கள் கூறி, தாலி கட்டி, வாழ்த்துக்கள் கூறி, அலங்கரித்த பல்லக்கில் இருவரையும் ஊர்வலமாகக் கொண்டு சென்று பள்ளியறைக்கு அனுப்பி வைப்பார்கள்.

பங்குனி உத்தரக் கல்யாணத் திருவிழா பசுவாகிய ஆன்மா பதியாகிய சிவத்துடன் இணைவதாக ஓர் உயர்ந்த நிலையினை எடுத்துக் காட்டுகின்றது. இத்தினத்தில் அம்மையப்பனைக் குறித்து சைவமக்கள் விரதமிருப்பர். பகற்பொழுது உணவு உட்கொள்ளாது, இரவில் பால், பழம் போன்ற உணவு வகைகளை உட்கொண்டு விரதம் அனுஷ்டிப்பர்.

இத்தினத்தில் பார்வதியை, பரமேஸ்வரன் மணந்தார். ராமன், சீதையை கரம் பிடித்தார். மேலும் முருகன், தெய்வானையை கரம் பிடித்தார். திருமகள் பங்குனி உத்தர விரதத்தை அனுஷ்டித்து விஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் தகைமையைப் பெற்றதாகவும் புராண வரலாறு சொல்கிறது. திருவரங்கநாதர், ஸ்ரீ ஆண்டாள் முதலிய தெய்வத் திருமணங்கள் பலவும் பங்குனி உத்தரத்தன்றுதான் நடைபெற்றன. இதனால் பங்குனி உத்தர விரதம் திருமண விரதம் என்றும், கல்யாண சுந்தர விரதம் என்றும் போற்றப்படுகிறது.

இளைஞர்களும், கன்னிகளும் இத்தினத்தில் சிவனையும், முருகனையும் திருமணக் கோலத்தில் வணங்கி வழிபட்டால், திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் எனவும் நம்பப்படுகிறது.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடி அமைந்திருக்கும் பழனியில் பங்குனி மாத உத்தர நட்சத்திர நாளில்தான் திருவிழா நடைபெறுகிறது. அனைத்து அறுபடை வீடுகளிலும் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது.


**(நன்றி : தமிழ் விக்கிபீடியா)**

# யாழ்ப்பாணத்தில் பன்னாட்டு இதழியல் மாநாடு

நான்காவது பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் 6ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. பன்னாட்டு தமிழ் இதழியல் இயக்கமும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் தொடர்பியல் துறையும் உதயன் பத்திரிகையுடன் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கோ.இரவீந்திரன் தலைமையில் இந்த மாநாடு இடம்பெறவிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தியாவில் நடைபெற்றுவந்த பன்னாட்டு இதழியல் மாநாடு, இம்முறை முதற்தடவையாக இலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது என்றும் இதழியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், அனுபவப் பகிர்வுகள் மற்றும் பாரம்பரிய கலை நிகழ்வுகளை உள்ளடக்கியதாக மாநாடு அமையவிருப்பதாகவும் பன்னாட்டு தமிழ் இதழியல் இயக்கத்தின் இலங்கை ஒருங்கிணைப்பாளர் திரு.தே.தேவானந்த் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள விரும்புவோர் 0773112692என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.



இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே!



# ஈழத்து இலக்கிய வரலாற்றில் இயல்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிவரும் அகில இலங்கை கம்பன் கழகம்



எண்பதுகளில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்ட கம்பன் கழகம் ஈழத்து இலக்கிய வரலாற்றில் இயல்துறை வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்துவருகிறது. பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் என்போர் இலக்கிய மேடைகளை அலங்கரித்த பின், ஒரு உன்னத மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை கம்பன் கழகத்திற்கு உரியது.

யாழ்.இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் ஒன்றாகக்கற்ற இ.ஜெயராஜ், தி.திருநந்தகுமார், க.குமாரதாசன், மாணிக்கவாசகர், கு.ரட்ணகுமார், சிவகுமார் ஆகிய இளைஞர்களால் கம்பன் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கழகத்தின் அமைப்பாளராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் அன்று முதல் இன்றுவரை செயற்பட்டு வருகிறார்.

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின், கொழும்பிலும் கம்பன் கழகம் உருவாக்கப்பட்டு, ஆண்டுதோறும் கொழும்பில் கம்பன் விழா சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. நம் நாட்டு அறிஞர்களுடன், பல இந்திய அறிஞர்கள் விழாவில் கலந்துகொண்டு பேருரைகளை ஆற்றி வருகிறார்கள். கம்பன் கழகத்தின் இத்தகைய செயற்பாட்டினால் பல இளைய தலைமுறை பேச்சாளர்கள் காலத்துக்குக் காலம் தோற்றம்பெற்று வருகிறார்கள். பட்டிமன்றம், வழக்காடு மன்றம், சுழலும் சொற்போர், ஐயந்தெளி அரங்கம், கவியரங்கம், கருத்தரங்கம் என இயல்துறை எம் மண்ணில் உன்னத வளர்ச்சி பெறுவதற்கு கழகத்தின் பணி மறக்க முடியாதது.

இன்று உலகளாவிய ரீதியில் சொற்பொழிவுத் துறையில் முத்திரை பதித்தவராக கம்பவாரிதி இ.ஜெயராஜ் விளங்குகிறார். தமிழ்நாட்டில் பெரும்பாலான தமிழ் அறிஞர்களால் போற்றப்படுகின்ற ஈழத்து தமிழ் அறிஞராக இவர் திகழ்வது அனைவரும் அறிந்ததே. இந்திய தமிழ் இலக்கிய நிறுவனங்கள் பல கம்பவாரிதிக்கு விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளன. இவர் சண்டிலிப்பாய் கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். திரு.இலங்கைராஜா அவர்களின் இளைய புதல்வர். இவர் அகவை அறுபதை நிறைவு செய்திருப்பதன்மூலம் மணிவிழா கண்டுள்ளார்.

## கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் பேராசிரியராக உயர்வு



பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் பேராசிரியராக உயர்வு பெற்றுள்ளார்.

கோப்பாய் பிறப்பு இறப்பு பதிவாளர் ஸ்ரீவரதராஜன் தம்பதிகளின் புதல்வரான இவர், யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். அகில இலங்கை கம்பன் கழகத்தின் உறுப்பினர் என்பதுடன், சிறந்த பேச்சாளருமாவார்.

## திரு.சண்.தயாளன் மணிவிழா

ஈழத்தின் தலைசிறந்த விளையாட்டு வீரராக பலராலும் அறியப்பட்ட திரு.சண்.தயாளன் உதவிக் கல்விப் பணிப்பாளர் (யாழ்.வலயம்) பதவியிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றார். இவரது மணிவிழா இம்மாதம் 24 ஆம் திகதியன்று யாழ்.இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## திரு. செல்வம் கண்ணதாசன் பேராசிரியராக உயர்வு



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.செல்வம் கண்ணதாசன் பேராசிரியராக உயர்வு பெற்றுள்ளார். இவர் வட்டுக்கோட்டை விக்ரோறியா கல்லூரியின் பழைய மாணவராவார்.

## மூத்த பத்திரிகையாளர் திரு.எஸ். திருச்செல்வம் அவர்களுக்கு கௌரவம்



எழுத்துத் துறையில் ஐம்பது வருட நிறைவையொட்டி கனடாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன், சிறப்பு மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## உலகில் தலைசிறந்த ஆசிரியர்களுள் ஒருவராக யசோதை செல்வக்குமாரன்

உலகில் தலைசிறந்த பத்து ஆசிரியர்களுள் (2019) ஒருவராக அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கை தமிழ்ப் பெண்ணான யசோதை செல்வக்குமாரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னர் உலகின் தலைசிறந்த ஐம்பது ஆசிரியர்களுள் ஒருவர் என்ற நிலையினைப் பெற்றுள்ள இவர், இப்போது பத்து ஆசிரியர்களுள் ஒருவராக முன்னேறி சாதனை படைத்துள்ளார். இந்த வெற்றியானது அவுஸ்திரேலியாவுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகக் கருதப்படுவதாக அந்த நாட்டு சகல ஊடகங்களும் பாராட்டியுள்ளன.

யசோதை செல்வக்குமாரன் அவுஸ்திரேலியா மேற்கு சிட்னியிலுள்ள ரூட்டி ஹில் உயர்நிலைக் கல்லூரியில் வரலாறு, சமூகமும் கலாசாரமும், புவியியல் போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

2010ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட லண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் The Varkey Foundation என்ற அமைப்பே இந்த தெரிவினை வருடந்தோறும் நடத்தி வருகிறது. 179 நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற பத்தாயிரத்துக்கும் அதிகமான பரிந்துரைகளிலிருந்தே இந்த பத்துப் பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சாதனைக்குரிய விருதும், பரிசுப் பணமும் இம்மாதம் 24ஆம் திகதி டுபாயில் வைத்து வழங்கப்படும் என தெரியவருகிறது.

யசோதை செல்வக்குமாரன் யாழ். வல்வெட்டித்துறையை சொந்த இடமாகக் கொண்டவர் என்பதால், இவரது இந்த சாதனையானது ஈழத்தமிழர்களுக்கும் பெருமை தருவதாக அமைந்துள்ளதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## நீதிநூற் தொகுப்பு வெளியீட்டு விழா

இந்து சமய அலுவல்கள் திணைக்களம் இந்து சமய அறநெறிக் கல்லூரியின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக வெளியிட்ட நீதிநூற் தொகுப்புகளின் வெளியீட்டு விழா கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் திணைக்களத் தலைவர் திரு.அ.உமாமகேஸ்வரன் அவர்களது தலைமையில் இடம்பெற்றது.

நீதி நூல்களாகிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, மூதுரை, நல்வழி, வெற்றி வேட்கை, திருக்குறள் உட்பட 13 நூல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு சகல அறநெறிப் பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டன. இம்முயற்சியை பலரும் பாராட்டினர்.

## சுவிற்சர்லாந்து நகரசபை தேர்தலில் இலங்கைத் தமிழ்ப்பெண் வெற்றி

சுவிற்சர்லாந்து நாட்டின் பேர்ண் மாநிலத்திலுள்ள தூண் நகரசபைத் தேர்தலில் இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவர் வெற்றிபெற்றுள்ளார். யாழ். புங்குடுதீவைச் சேர்ந்த தர்ஷிகா கிருஷ்ணானந்தம் வடிவேலு என்பவரே அந்தப் பெண்மணியாவார்.

கடந்த நவம்பர் (2018)மாதம் அங்கு நடந்த நகரசபை தேர்தலில் சுவிஸ் மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியான எஸ். பி. எனப்படும் சோஷலிஸ ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிட்ட தர்ஷிகா 2916 வாக்குகள் பெற்றிருந்தார். கடந்த 2014ஆம் ஆண்டு நடந்த நகரசபை தேர்தலிலும் இவர் போட்டியிட்டபோது 2003 வாக்குகள் கிடைத்திருந்தும், வெற்றிபெறவில்லை.

யாழ். புங்குடுதீவில் பிறந்து, சிறுவயதிலேயே சுவிற்சர்லாந்து சென்று அங்கு படித்துப் பட்டம் பெற்றவர். இப்போது சுவிஸ் மாநிலத்து சோஷலிஸ ஜனநாயகக் கட்சியின் தூண் நகர நிர்வாகசபை உறுப்பினர்களுள் ஒருவராகப் பணியாற்றுகிறார்.

## தம்பு சிவாவின் பவளவிழா மலர் வெளியீடு

பிரபல எழுத்தாளர் திரு.தம்பு சிவசுப்பிரமணியம், (தம்பு சிவா) அவர்களின் பவளவிழா மலர் வெளியீடும், தாயக ஒலி 40ஆவது சிறப்பு மலர் அறிமுகமும் இம்மாதம் 17ஆம் திகதியன்று கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் வ.மகேஸ்வரன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தின்போது பேராசிரியர் சபா.ஜெயராசா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மேற்படி நிகழ்வின்போது இரா.உதயணன் இலக்கிய விருது (2018)வழங்கலும் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் பவளவிழா சிறப்புமலர் இலவசமாக வழங்கப்பட்டது.

## பெருவைத்தியராக விளங்கிய யோகர் சுவாமிகள்



யோகர் சுவாமிகளுடைய இளமைக்காலம் ஆத்மீகத் துறைக்குப் பல வழிகளையும் ஆக்கிக் கொடுத்தது. நீர்ப்பாசன இலாகாவில் கடமைபுரிந்த இவர் கடமையின் இடையிலே தோத்திரங்களையும் சாஸ்திரங்களையும் நன்றாகப் பயின்று வந்தார். அவர் உள்ளத்தை ஈர்த்த சிறந்த நூல் பெரியபுராணம். இதற்கு மேலாக, செல்லப்பா சுவாமிகளின் ஞானத் தொடர்பு வாழ்வை முழுமையடையச் செய்துவிட்டது. செல்லப்பா சுவாமிகள் தமது சீடரை நாடோறும் பரீட்சித்து அவர் பக்குவ நிலையைக் கண்டு ஞானத்தை உணர்த்தத் தொடங்கினார். ஆண்டி வேடத்தில் நல்லூர் வீதியில் காட்சியளித்த அவர், யோகர் சுவாமிகளுக்கு ஞானம் உணர்த்தும் குருவாக அமைந்தமை திருவருட் செயலே. இந்த நிலையை நற்சிந்தனையிலே சுவாமிகள் பாடியுள்ளார்.

தனது குருவினிடமிருந்து தான் பெற்ற அனுபவத்தைத் தன்னை வந்து அடைபவர்களுக்கு வழங்க வேண்டும் என்று முன்வந்தார். அவரிடம் தரிசனத்திற்குச் சென்றவர்கள் அனலிலே காய்ச்சப்பெற்ற பொன்போலப் புத்தொளி பெற்றே வீட்டுக்குத் திரும்புவார்கள். இறைவனையும் இறைவனை வழிபடும் அடியவர்களையும் வழிபடவேண்டும் என்பதையே திரும்பத்திரும்பக் கூறுவார். ஆண்டவன் எம்மைவிட்டு அகலாமல் இருக்கிறான் என்றும் அதே நேரத்தில் நாம் ஆண்டவனைப் புறக்கணித்து அகலச் செல்ல உலக பாசம் எம்மை இழுக்கிறது என்றும் சொல்வார்.

மதம், இனம், மொழி என்ற பேதம் நோக்காது தன்னிடம் யார் யார் வருகை தந்த நேரத்திலும் அவ்வவர் மனக் கருத்தை அறிந்து ஆவன கூறிவிடுவார். மனிதனின் எண்ணங்களை ஊடுருவி அறிவதில் இவர் பேராற்றல் படைத்தவர். அவருடைய உபதேசங்கள் கேட்டாரது உள்ளங்களைப் பிணித்துவிடும். எத்தனையோ சித்துக்கள் கைவரப் பெற்றவராக இருந்த போதிலும் அவற்றையெல்லாம் அவர் வெளிக்காட்டவில்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சுவாமிகள் பின்னிப் பிணைந்து விட்டார். நோய்நொடிகளுக்கு எல்லாம் அவர் ஏற்ற மருந்து சொல்லிக் கொடுப்பார். வைத்தியர்களால் மாற்ற முடியாத கொடிய வியாதிகளையெல்லாம் இவர் மாற்றியுள்ளார். உடல்நோய், உளநோய் யாவையும் மாற்றிவிடும் பெரு வைத்தியர் இவர்.

**- கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

## யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் ஓய்வு பெற்றார்

"வேம்படி மகளிர் கல்லூரி வரலாற்றில் உன்னத சாதனை படைத்து பெருமையோடு ஓய்வு பெறுகிறார் திருமதி வேணுகா சண்முகரட்ணம். பல பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், தான் கற்ற கல்லூரியிலேயே அதிபராகப் பணியாற்றும் பேற்றினைப் பெற்றார். தேசிய மட்டத்தில் சகல துறைகளிலும் சாதனை படைத்து, இலங்கை முழுவதிலும் முதற்தரப் பாடசாலைகளில் ஒரு பாடசாலையாக வேம்படி மகளிர் கல்லூரிக்கு உன்னத இடத்தை தேடிக்கொடுத்துவிட்டு அம்மையார் ஓய்வு பெறுகிறார்." இவ்வாறு அதிபரின் பிரிவுபசார வைபவத்தின் போது கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் குறிப்பிட்டார்.

மேலும் அவரது உரையின்போது, இவ்வாறு தெரிவித்தார்.

"பாடசாலைக்கு அதிபராக வருவதற்கு பல்வேறு ஆளுமைச் சிறப்பு வேண்டும். இக்கல்லூரியின் பழைய மாணவியான இவரை கல்லூரி சமூகம் தேர்ந்தெடுத்து அழைத்தது. நேர்மையாக சிறந்த பணியாற்றி பலரது பாராட்டையும் அம்மையார் பெற்றுள்ளார். விஞ்ஞானப் பட்டதாரியான அதிபரின் காலத்தில், வேம்படி மகளிர் கல்லூரியின் பெறுபேறுகள் உச்சநிலையை அடைந்திருந்தன. இவர், தனது ஓய்வு காலத்தில் சகல செல்வங்களோடும் நிறைவாக வாழ நாம் பிரார்த்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்" இவ்வாறு கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

## மருத்துவ சங்கத்திற்கு புதிய தலைவர்



யாழ் மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக வைத்திய நிபுணர் பூபாலன் லக்ஷ்மன் அவர்கள் அண்மையில் பதவியேற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இந்த வைபவம் இடம்பெற்றது.

## இந்து தர்மம் சஞ்சிகை வெளியீடு

பேராதனை பல்கலைக்கழக இந்து மன்றத்தின் சஞ்சிகையான 'இந்து தர்மம்' மகா சிவராத்திரி தினத்தன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. பேராதனை குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.



## வைத்திய கலாநிதி ந.சிவராஜா மறைவு

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறை முன்னாள் தலைவரும், வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கத்தின் தலைவரும், உடுவில் கேன் புற்றுநோயாளர் காப்பகத்தின் முன்னாள் தலைவரும் சிறந்த கல்விமானுமான வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா அவர்கள் இம்மாதம் 6ஆம் திகதியன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, கொக்குவில் இந்து மயானத்தில் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

## மருத்துவ நிபுணர் எம்.சிவசூரியா மறைவு



யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தரும், சிறந்த மருத்துவ நிபுணருமான ஓய்வுபெற்ற பேராசிரியர் எம்.சிவசூரியா கடந்த மாதம் (பெப்ரவரி) 26ஆம் திகதியன்று தனது 86ஆவது வயதில் கொழும்பில் காலமானார். இவர் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

## சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவின் ஞாபகார்த்த நிகழ்வு



சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவின் 125ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு இம்மாதம் 11ஆம் திகதியன்று மாலை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த வைபவத்தின்போது தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த திரைப்பட நடிகர் பத்மஸ்ரீ விவேக் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

## சமரச ஞானி

சிவயோக சுவாமிகள் எல்லாமத உண்மைகளையும் அறிந்தவர்கள். அவர் ஒரு சமரச ஞானி. அதனால் எல்லாச் சமயத்தவர்களும் அவரை நாடி வந்தார்கள். அவரவருக்கேற்ற உபதேசம் கிடைத்து வந்தது. ஆனால் சுவாமிகள் தன்னை ஒரு சிவதொண்டன் என்றே கூறிக்கொள்வார்கள். சுவாமிகளுடைய சந்நிதியில் ஒருசில நிமிடங்கள் இருந்தாலும் மனச்சாந்தி ஏற்படுவதை யாரும் உணரலாம். சுவாமிகளைச் சூழ எந்த நேரத்திலும் ஓர் ஆத்மீக அலை வீசிக் கொண்டேயிருக்கும். அந்த ஆத்மீக அலைக்குள் இருந்து ஆனந்தம் பெறத் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டவர்கள் நாட்கணக்காக உணவையும், நேரத்தையும், தாகத்தையும் மறந்து தியானத்தில் ஈடுபட்டிருப்பர். அப்படிப்பட்ட மனோபக்குவம் அற்றவர்களால் ஐந்து நிமிட நேரந்தானும் அங்கு இருக்க முடிவதில்லை. அத்தகையோரின் பரபரப்பை உணர்ந்த சுவாமிகள் “வந்து வெகுநேரமாகிவிட்டது. ஓடிப்போய் உங்கள் கடமையைக் கவனியுங்கள்” என்று கூறி அவர்களைப் போகச் செய்து விடுவார்கள்.

**- ஆத்மஜோதி நா.முத்தையா**

## புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம்

வரணி தாவளை இயற்றாலை கல்வளை பிள்ளையார் ஆலயத்தின் புதிய பஞ்சகலச சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இம்மாதம் 17ஆம் திகதியன்று இடம்பெற்றது. இந்த சித்திரத்தேர் சிற்பக்கலைக்குரிசில் கிருஷ்ணபிள்ளை கலாமோகன் அவர்களது கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.


### சிவபூமி
### மாதாந்த செய்திப் பத்திரிகை
### சந்தா விபரம்

சிவபூமி - மாதாந்த செய்திப் பத்திரிகைக்கு வருடாந்த சந்தா செலுத்துவதன் மூலம் கிரமமாக பத்திரிகையை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக ஒவ்வொரு மாதமும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

**சந்தாப் பணத்தை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.**

**Hatton National Bank - Chunnakam**
**Sivapoomi Trust - 117020080261**

சந்தாப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்த பின்னர் அது தொடர்பாக சிவபூமி அறக்கட்டளை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.

வருடாந்த சந்தா (தபாற் செலவு உட்பட)

உள்நாடு : ரூபா 600/=

வெளிநாடு : 25$ (அமெரிக்க டொலர்)

தொடர்புகளுக்கு : சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.


தொலைபேசி இல : 021 222 7938

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்றுமாடிக் கட்டடத்தை அமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க அவர்கள் அண்மையில் திறந்து வைத்தார்





## அழகான கையெழுத்துடைய மாணவி




உலகில் மிகவும் அழகான கையெழுத்துடையவராக நேபாள நாட்டின் மாணவி ஒருவர் விளங்குகிறார். ப்ரக்கர்ரி மல்லா என்ற பெயருடைய இவர் அச்சில் பதித்தது போல தனது பாடக் குறிப்புகளை எழுதி வைத்துள்ளார் என இணையத் தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இவர் 8ஆம் தரத்தில் படித்துக்கொண்டிருக்கிறார்.

## கிளிநொச்சி மாணவிகள் சாதனை

(விபரம் உள்ளே)




## மணிவிழா காணும் திரு.சண்.தயாளன்




Registered in the Dept.of Post of Sri Lanka Under No. QD/29/News/2019

## வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பெருந்திருவிழாவும் வசந்த விழாவும் (16.03.2019)







### சுவிற்சர்லாந்து நாட்டின் நகர சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற இலங்கைத் தமிழ்ப் பெண் தர்ஷிகா கிருஷ்ணானந்தம்



### புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் (17.03.2019)



வரணி தாவளை இயற்றாளை கல்வளை பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பஞ்சகலச சித்திரத் தேர்





9789557420004


ISBN 978-955-7420-00-4

இந்தப் பத்திரிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது. (மார்ச் – 2019)


**சிவபூமி**

# தவத்திரு சிவயோக சுவாமிகளின்
# 55ஆவது குருபூசை சிறப்பிதழ் (18.03.2019)





அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தில்
பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள
சிவயோக சுவாமிகளின்
ஐந்து அடி உயரமான கருங்கல்லிலான
திருவுருவச் சிலை




கொழும்புத்துறை ஆச்சிரமம்




# சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற ஞானிகள்



மார்க்கண்டு சுவாமிகள்




சுப்பிரமுனிய சுவாமிகள்



சாந்த சுவாமிகள்




செல்லத்துரை சுவாமிகள்



ஜேர்மன் சுவாமிகள்




நரிக்குட்டி சுவாமிகள்



சந்திரபாலா சுவாமிகள்





வடிவேல் சுவாமிகள்

# யாழ்ப்பாணத்து மாமுனிவர் தவத்திரு சிவயோக சுவாமிகள்

சித்தர்கள், ஞானிகள், யோகியர் என்ற வகையில் ஒரு ஞானபரம்பரையை தோற்றுவித்த பெருமைக்குரியது யாழ்ப்பாணக் குடாநாடு. இதன் மூலவராக கடையிற்சுவாமிகள் போற்றப்படுகிறார் என்பது வரலாறு. இவரது உத்தம சீடர்களுள் ஒருவர் தான் செல்லப்பா சுவாமிகள். இவர் நல்லைக் கந்தன் தேரடியில் தவநிலையில் வாழ்ந்து முருகப் பெருமானை தரிசித்து வந்தவர். அடியவர்களால் ஒரு சித்தராகப் போற்றப்பட்டவர். இவரது சீடராக வந்தவர்தான் சிவயோக சுவாமிகள்.

சித்தர்கள், ஞானிகள், யோகிகள் என்போர் சாதாரண மனிதர்களாகவே பிறப்பது வழக்கம். அவர்கள் மக்களோடு மக்களாக - சாதாரண நிலையில் வாழ்ந்து வரும்போது குறிப்பிட்ட ஒரு காலத்தில் இறைவனால் ஆட்கொள்ளப்படுவதாக சொல்லப்படுகிறது. இதனூடாக இவர்கள் இறையுணர்வு கைவரப்பெற்ற அனுபூதிமான்களாக மாறி விடுகிறார்கள். சிவயோக சுவாமிகளின் வாழ்க்கை வரலாறும் இவ்வகையிலேயே அமைந்திருக்கிறது.

மாவிட்டபுரத்தில் வாழ்ந்துவந்த சைவப் பெரியாரான அம்பலவாணர் சின்னாச்சி அம்மையார் தம்பதியினருக்கு 1872ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி புதல்வராகப் பிறந்தார் யோகநாதன். இவரது சிறுவயதில் தாயார் இறந்துவிட்டார். தந்தையார் மலையகப் பகுதியில் விற்பனை நிலையமொன்றை நடத்தி வந்த நிலையில், யோகநாதன் யாழ்ப்பாணத்திலுள்ள அவரது தந்தைவழி மாமியார் வீட்டில் தங்கியிருந்து கல்வி கற்று வந்தார். அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த இவரது சிறிய தகப்பனாரும் இவரது கல்வியில் மிகுந்த அக்கறை காட்டிவந்தார்.

யோகநாதன் கல்வியை முடித்துவிட்டு, கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பண்டகசாலைப் பாதுகாவலராக கடமையாற்றி வந்தார். அப்போது தனது ஓய்வு நேரத்தை சமயப்பயிற்சியிலும் தியானம் மற்றும் திருமுறைப் பாராயணம் போன்ற ஆன்மீக செயற்பாடுகளிலும் ஈடுபடுத்திக் கொண்டார். அவ்வேளையில் இறை சிந்தனையின் மேலீட்டால், தனது முப்பத்திரண்டாவது வயதில் கடமையிலிருந்து விலகி முற்றுமுழுதாகவே வாழ்க்கையை இறைபணிக்காக அர்ப்பணித்துக் கொண்டார். அப்போது தந்தை இறந்துவிடவே, கிளிநொச்சியில் இருந்து மாவிட்டபுரம் திரும்பிவிட்டார். இங்கிருந்து கால்நடையாகவே நல்லூர் சென்று முருகனை தரிசித்து வருவது வழக்கம்.

அந்தநாளில் நல்லூர்க் கந்தன் தேரடியில் வாழ்ந்து வந்த செல்லப்பா சுவாமிகளின் பெருமையை அறிந்து கொண்ட யோகநாதன், ஒருநாள் அவரைத் தரிசிப்பதற்காக சென்றிருந்தார். முதலாவது சந்திப்பின்போதே "உன்னைத்தான் பார்த்திருந்தேன். உனக்கே பட்டம் சூட்டப்போகிறேன். வா வா" என்று அழைத்து ஞானோபதேசம் அருளினார் செல்லப்பா சுவாமிகள்.

இதன் பின்னரே சிவயோக சுவாமிகளாக மக்கள் அனைவராலும் போற்றப்படும் வகையில் உயர் பக்குவநிலை பெற்றார். சில ஆண்டுகள் செல்லப்பா சுவாமிகளுடன் இணைந்திருந்த சிவயோக சுவாமிகள் ஞானதீட்சை பெற்று, குருநாதரின் வேண்டுகோளின்படி கதிர்காமம் முதலான ஆலயங்களுக்கு பாதயாத்திரை மேற்கொண்டார். ஓராண்டு காலத்தின் பின்னர் திரும்பி வந்தபோது "இரு யானைகளை ஒரு முனையில் கட்ட முடியாது. நீ கொழும்புத்துறை சந்தியில் இலுப்பை மர வேரைப் பார்" என்றார் செல்லப்பா சுவாமிகள்.

சிவயோக சுவாமிகள் குருநாதரின் கட்டளையை ஏற்றுக் கொண்டு கொழும்புத்துறை சந்தியிலிருந்த இலுப்பை மரத்தடியில் பல நாட்கள் தியான நிலையில் அமர்ந்திருந்தார். பின்னர், இதற்கு அண்மையில் அடியார்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட சிறு குடிசையொன்றில் தங்கியிருந்தார். இது 1914 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடந்ததாகச் சொல்லப்படுகிறது.

அந்த வேளையில்தான் பலர் அவரை தரிசிப்பதற்காக வரத் தொடங்கினார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மட்டுமல்ல, நாடளாவிய ரீதியிலும் தமிழ், சிங்கள மக்களும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பலர் வந்து சிவயோக சுவாமிகளின் அருளையும் ஆசியையும் பெற்றுச் சென்றுள்ளார்கள். சைவ மார்க்கம் பற்றியும் வேதாந்த சித்தாந்த தத்துவக் கோட்பாடுகள் பற்றியும் பேசுவார். அடியார்களுடன் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடுவார். சனாதன தர்மத்தின் அழியாத உண்மைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்வார். யாருக்கு எது தேவையோ, அதை அருளினார். ஒருவருக்கு யோக சாதனையை வழங்குவார். மற்றவருக்கு பக்தியையும் உபாசனையையும் கற்பிப்பார். அடியார்களது வியாதியையும், மனக் கவலையையும் மாற்றுவதற்கான வழிமுறைகளை அருளினார். தமது அடியவர்கள் எங்கெங்கு இருந்தார்களோ அங்கெல்லாம் செல்வார். சுவாமிகளின் உபதேசங்கள் பலருக்கும் பயனுள்ளதாக அமைந்திருந்தன.

சிவயோக சுவாமிகள் பல தடவைகள் அடியவர்களுடன் இணைந்து இந்தியாவுக்கு திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டிருக்கிறார். இவரது உபதேசங்கள். அறிவுரைகள், பாடல்கள் என்பன வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவாகவே அமைந்துள்ளன. இவை ஒன்றுதிரட்டப்பட்டு 'நற்சிந்தனை' என்ற பெயரில் நூலாகவும் ஒலிநாடாவாகவும், இறுவட்டுகளாகவும் வெளிவந்துள்ளன. 'சிவதொண்டன்' என்ற பெயரில் மாத சஞ்சிகையொன்றை சுவாமிகள் வெளிவரச் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சிவதொண்டன் நிலையமொன்றையும் ஸ்தாபித்து இருக்கிறார். சுவாமிகளின் விருப்பத்தின்படி மட்டக்களப்பிலும் 'சிவதொண்டன்' நிலையமொன்று நிறுவப்பட்டு இருக்கிறது. இப்போது மேலை நாடுகளிலும் சிவயோக சுவாமிகளின் நினைவாக ஆச்சிரமங்கள் இயங்கி வருகின்றன.

ஒரு சீடர் பரம்பரையை உருவாக்கிய பெருமை சுவாமிகளுக்கு உரியது. அமெரிக்காவைச் சேர்ந்த சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், இங்கிலாந்தைச் சேர்ந்த சாந்த சுவாமிகள், ஜேர்மனியைச் சேர்ந்த கௌரிபாலா சுவாமிகள், அவுஸ்திரேலியா நரிக்குட்டி சுவாமிகள், பிரான்ஸ் சந்திரபாலா சுவாமிகள் போன்றோர் வெளிநாட்டு சீடர்கள் பட்டியலில் முக்கியமானவர்கள். சிவயோக சுவாமிகள் 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதத்து ஆயிலிய நட்சத்திர நாளன்று தனது 91 ஆவது வயதில் மகா சமாதியடைந்தார். இப்போதும் இவரது குருபூசை தினம் இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் கொண்டாடப்பட்டுவருகிறது. **- அ.கனகசூரியர்**

# அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் யாழ். வருகை

தவத்திரு சிவயோக சுவாமிகளின் 55 ஆவது குருபூசை வைபவத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளும் உலகின் பல பாகங்களைச் சேர்ந்த 55 அடியவர்களும் இம்மாதம் யாழ்ப்பாணம் வருகைதருகிறார்கள்.

இம்மாதம் 16ஆம் திகதியன்று காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படும் இவர்கள், அன்று மாலை 4.00மணியளவில் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்ட பின் யாழ். நகரை வந்தடைவார்கள். மறுநாள் 17ஆம் திகதியன்று காலை 8.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடு செய்தபின், முற்பகல் 10.00 மணியளவில் நல்லை ஆதீனத்திற்கு வருகை தருவார்கள். அன்றைய தினம் மாலை 4.30 மணியளவில் கோப்பாய், பழம்வீதியில் அமைந்துள்ள சுப்பிரமுனிய கோட்டத்திலும், கோப்பாய் ஸ்ரீ சாந்தலிங்கேஸ்வரர் ஆலயத்திலும் இடம்பெறும் பூசை வழிபாடுகளில் கலந்துகொள்வார்கள்.

ஹவாய் ஆதீன சுவாமிகள் குழுவினர், மறுநாள் 18ஆம் திகதியன்று காலை 8.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேரடியிலிருந்து பாதயாத்திரையாக கொழும்புத் துறையிலுள்ள தவத்திரு சிவயோக சுவாமிகளின் ஆச்சிரமத்தை சென்றடைவதுடன், அங்கு நடைபெறும் சிவயோக சுவாமிகளின் 55ஆவது குருபூசை வைபவத்திலும் அதேதினம் மாலை 5.00 மணியளவில் யாழ். சிவதொண்டன் நிலையத்தில் இடம்பெறும் சிறப்பு பூசை வழிபாடுகளிலும் பங்குகொள்வார்கள்.

19ஆம் திகதி காலை 9.00 மணியளவில் அளவெட்டி கும்பழாவளை பசுபதீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாட்டில் சுவாமிகள் குழுவினர் கலந்துகொள்வார்கள்.

20ஆம் திகதி காலை 9.00 மணியளவில் யாழ். வண்ணார்பண்ணை நீராவியடியிலுள்ள கடையிற்சுவாமிகள் சமாதிக் கோயிலில் இடம்பெறும் வழிபாட்டிலும், அதே தினம் மாலை 5.00 மணியளவில் யாழ். வேதாந்த மடத்தில் இடம்பெறும் சிறப்பு நிகழ்விலும் கலந்துகொள்வார்கள்.

21ஆம் திகதியன்று காலை 9.00 மணியளவில் கீரிமலை சிவபூமி மடத்திலும், அதே தினம் மாலை 5.00மணியளவில் கைதடியிலுள்ள மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமத்திலும், நாவற்குழி திருவாசக அரண்மனையில் இடம்பெறும் சிறப்பு நிகழ்விலும் கலந்துகொள்வார்கள்.

22ஆம் திகதி காலை 9.00 மணியளவில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திலும், நண்பகல் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திலும் இடம்பெறும் பூஜை வழிபாடுகளில் கலந்துகொள்வார்கள்.

சுவாமிகள் மற்றும் அடியவர்கள் குழுவினர் 23ஆம் திகதியன்று காலை திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கும், மறுநாள் 24ஆம் திகதியன்று திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கும் சென்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

# சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற ஞானிகள்

## மார்க்கண்டு சுவாமிகள்



சிவயோக சுவாமிகளது துறவுச் சீடர்களுள் முதன்மையான இவர் ஒரு தன்னையுணர்ந்த ஞானியாவார். சிவயோக சுவாமிகள் "இவரை உங்களுக்கு ஒரு திசைகாட்டியாக வைத்துள்ளேன்" எனக் குறிப்பிடுவார்.

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரான்பற்று என்னும் சிற்றூரில் 29.01.1899 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும், வடலியடைப்புச் சைவ வித்தியாலயத்திலும் பயின்றார். பின் கந்தரோடை கல்லூரியில் கற்று "கேம்பிரிச் சீனியர்" தேர்விற் சித்தியடைந்தார். பாடசாலைப் படிப்பு முடிந்த பின்னர் நில அளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் தொழில் கிடைத்தது. தியத்தலாவை, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் பணியாற்றினார்.

இவர் சிறுபராயம் தொடக்கம் ஆன்மீக நாட்டம் உடையவர். தமது இல்லத்தின் அருகாமையிலுள்ள முருகன் கோயிலில் அவர் சிறுவயது முதலே வழிபட்டு வந்தார். இவ்வாறு ஆன்மீகத்தில் மிக ஈடுபாடுடையவராக இருந்த இவர், தியத்தலாவையில் பணிபுரியும்போது சிவயோக சுவாமிகளைத் தரிசிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். அன்று முதல் சிவயோக சுவாமிகள் இவரைத் தனது ஆளுகைக்கு உட்படுத்தி இவருக்கு ஞான சாதனை பயிற்றத் தொடங்கினார். இவர் தனது ஐம்பதாவது வயதில் பணியிலிருந்து ஓய்வுபெற்று சிவயோக சுவாமிகளைப் பூரணமாகச் சரணடைந்தார்.

சிவயோக சுவாமிகள் தனது முதன்மைச் சீடரைக் குடியமர்த்துவதற்கான இடம் எப்பவோ தேர்ந்தெடுக்கப்பட்டது என அவரது தொண்டர்கள் கூறுவர். 1938ஆம் ஆண்டு சிவயோக சுவாமிகள் கைதடிக்குச் சென்றபோது சின்னத்தம்பி என்பவர் தனது வளவில் தனியாக ஒருவர் தங்கக்கூடிய குடிசை ஒன்றுள்ளது எனக் குறிப்பிட்டார். அப்போது சுவாமி "பொறுத்திரு அதற்கு இன்னும் சிலகாலம் இருக்கின்றது" எனக் கூறினார். பின் சின்னத்தம்பி அவர்களின் மகனான விசுவலிங்கம் அவர்களிடம் 1940 ஆம் ஆண்டளவில் அக்குடிசையை ஆயத்தம் செய்து பால்காய்ச்சுமாறு கூறினார். அவ்வாறு செய்ததும் சுவாமிகள் அதில் விளக்கேற்றி நற்சிந்தனை முதலியன பாராயணம் செய்யுமாறு சொன்னார். பின் 1950 களில் ஒருநாள் "விசுவலிங்கம் உனக்கு இனிமேல் கைதடியில் இருக்க நல்ல சிநேகிதனைத் தருகிறேன். அவன் போகும்போது உங்களுக்கு எல்லாம் தந்துவிட்டுப்போவான். நான் நாளை அவனை கைதடிக்கு அழைத்து வருவேன்" என சிவயோக சுவாமிகள் விசுவலிங்கம் அவர்களிடம் கூறினார். பின் மார்க்கண்டு சுவாமிகளை அழைத்துக்கொண்டு தேவையான பொருட்களையும் கொண்டு சென்று கைதடி ஆச்சிரமத்தில் குடியமர்த்தினார்.

சிவயோக சுவாமிகள் உணர்த்திய பிரதான சாதனை "சும்மா இரு" என்பதுவே இவர் உண்மையை உணருவதற்கான சாதனையாக இருந்தது. சும்மா இரு என்பது பேச்சு வழக்கு மொழியில் வேலை ஏதும் இன்றி ஓய்வாயிரு என்னும் பொருள்படும். ஆனால் ஞானசாதனையில் சும்மா இரு என்பது உடலால் வேலை செய்யாதிருத்தலை அன்றி மனத்தினால் சும்மா இருத்தலையே குறிக்கும். அதாவது மனத்தினை அங்குமிங்கும் அலையவிடாமல் அசைவின்றிப் பேணுவதே. மார்க்கண்டு சுவாமிகளுக்கு சிவயோக சுவாமிகள் கூறிய வாசகம் "வடதிசை காட்டும் கருவி" (Be like a compass) போல் இரு என்பதாகும். அதேபோல் அவரும் எப்பொழுதுமே பரப்பிரமத்தை நோக்கிய வண்ணமே சாதனை செய்திருந்தார். இவரை ஆலயங்கள் தோறும் சென்று வணங்குவதற்கும் சிவயோக சுவாமிகள் அனுமதிக்கவில்லை. அருகிலிருக்கும் நல்லூருக்கும் செல்ல அனுமதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகளின் உடம்பைக் காட்டி "இதுதான் நல்லூர், இதுதான் தேர்" என அருளினார். குண்டலினி பயிற்சிக்கும் இவரை அனுமதிக்கவில்லை. குண்டலினியின் எழுச்சியைப் பற்றியும் சிரத்தை கொள்ளத் தேவையில்லை எனவும் அருளினார். இவ்வாறு எவ்வெவ் துறைகளில் மனம் லயிக்குமோ அவ்வக்கருமங்களில் மார்க்கண்டு சுவாமிகளைச் செல்லவிடாமல் சும்மா இருப்பதற்கே அவரைப் பழக்கினார். அதுவே அவரது ஞானசாதனையாகவும் ஆகியது.

மார்க்கண்டு சுவாமிகள் 1984 மே மாதம் 29ஆம் திகதி வைகாசி கார்த்திகை நட்சத்திரத்தன்று சமாதியடைந்தார்.

### காட்சி கொடுப்பான் எழில்முருகன்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் - நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி

– சிவயோக சுவாமிகள்

## குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்



யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளின் கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்கு 1949ஆம் ஆண்டு வைகாசி விசாக தினத்தன்று ஓர் அமெரிக்க இளைஞர் வந்தார். அவரின் வருகையை எதிர்பார்த்திருந்த சிவயோக சுவாமிகள் அவருக்கு சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாம தீட்சை அளித்தார். அவரே நமது குருதேவர். சிவயோக சுவாமிகள் குருதேவருக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து அவரின் வாழ்வின் பணிகள் குறித்து அறிவுரைகளையும் வழங்கினார். சிவயோக சுவாமிகள் குருதேவரின் முதுகிலே ஓங்கிப் பலமாக அடித்து "இனி உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்கள் அமைத்து பலருக்கு உணவளிப்பாய்" என்று ஆசி வழங்கினார். இந்த அடி குருதேவரை நாதர் சித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக அமைந்தது. யாழ்ப்பாண மக்கள் இந்த அரிய நிகழ்ச்சியை ஒரு முடிசூட்டு விழா என்று கூறி மகிழ்ந்தனர். அப்போது குருதேவருக்கு வயதோ இருபத்தியிரண்டு. சிவயோக சுவாமிகளுக்கோ எழுபத்தியேழு.

குருதேவர் இலங்கையில் இருந்த காலத்தில் சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் அளவெட்டி எனும் கிராமத்தில் ஆச்சிரமமொன்றை நிறுவினார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றி வரும் சைவசித்தாந்த தர்ம சபை இங்குதான் ஆரம்பமாகியது. சற்குருவின் ஆணைப்படி குருதேவர் தாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் சாதனைகளில் ஈடுபட்டார். தினசரி சாதனையாலும் ஆழ்ந்த தியானத்தாலும் ஞான திருஷ்டி, ஞான தரிசனம் ஆகிய அக ஆற்றல்கள் குருதேவருக்கு வெளிப்பட்டன.

1957ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் குருதேவர் இமாலய கலாபீடத்தை நிறுவி கலிபோர்னியாவில் அமெரிக்காவின் முதலாவது இந்துக் கோயிலையும் ஆரம்பித்து வைத்தார். கீழைத்தேயத்துக்கும் மேலைத்தேயத்துக்கும் இடையில் மையமாக விளங்கும் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் 459 ஏக்கர் நிலப்பரப்பில் 1970ஆம் ஆண்டு குருதேவர் குவை சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறடி உயரமான சிவநடராஜரை மூலமூர்த்தியாகக் கொண்ட ஒரு கோயிலை ஸ்தாபித்தார். இதுவே மேலைத்தேசத்தில் அமைந்த முதலாவது சிவன் கோயிலாகும். உலகிலேயே அக்கோயிலில்தான் 108 தாண்டவ மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 16தொன் எடையுள்ள பெரிய நந்தியை உடைய இக்கோயிலில் எட்டுக் காலப் பூசைகளையும் ஆதீனத்துத் துறவிகள் செய்து வருகின்றனர்.

குருதேவருக்கு 1975ஆம் ஆண்டு மாசி மாதம் சிவபெருமான் ஓர் அகக்காட்சியை அருளினார். இந்த அகக் காட்சியின்படி புனித வைலுவ நதிக்கரையில் குருதேவர் ஒரு சுயம்புலிங்கத்தைக் கண்டார். இச்சுயம்புலிங்கத்தை மையமாகக் கொண்டே சன்மார்க்க இறைவன் கோயில் உருவாகி வருகின்றது. சன்மார்க்க இறைவன் கோயில் நுழைவாயிலில் ஓர் உருத்திராட்ச மரச்சோலை. இச்சோலையில் இருந்து கோயிலுக்கு இருமருங்கிலும் கொன்றை மரங்களையுடைய ஒரு நீண்ட நேரிய பாதை, இதுவே சன்மார்க்கம். இப்பாதையில் ஓர் ஆலமர நிழலில் விநாயகப் பெருமான் எழுந்தருளி உள்ளார். அவரிடம் விடைபெற்றுச் செல்லும்போது வழியில் ஒரு குன்றின் மேல் முருகப் பெருமான் தரிசனம் தருகின்றார். அவரையும் தரிசித்து நேரே சென்றால் சுயம்புலிங்கேஸ்வரரை நாம் அடையலாம். நூற்றியெட்டு வில்வமரங்களுக்கு மத்தியில் வீற்றிருக்கும் இந்த சுயம்புலிங்கேஸ்வரருக்கு 1975ஆம் ஆண்டு முதல் நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இறைவன் கோயிலில் பிரதிஷ்டை செய்யவென ஒரு ஸ்படிகலிங்கம் குருதேவருக்கு 1987ஆம் ஆண்டு ஆவணி மாதம் கிடைக்கப்பெற்றது. ஆறு கோணங்களையுடைய இந்த ஸ்படிகலிங்கம் 700 இறாத்தல் எடையும் 39 அங்குல உயரமும் உடைய அற்புதமான உலகின் மிகப் பெரிய ஸ்படிகலிங்கமாகும். இறைவன் கோயில் முற்றிலும் கருங்கற்களினால் ஆகம விதிப்படி அமைந்த கோயிலாக பல தலைமுறைகளுக்கு நிலைத்து நிற்கக்கூடிய வகையில் உருவாகி வருகின்றது.

1979ஆம் ஆண்டு குருதேவர் Hindusiam Today என்னும் சஞ்சிகையை ஆரம்பித்தார். இந்தச் சஞ்சிகை உலகெங்கும் வாழும் இந்துக்களின் குரலாக சர்வதேச ரீதியில் ஒலிக்கின்றது. இந்து சமயம் பற்றிய பல நூல்களை குருதேவர் எழுதியுள்ளார். இன்று இவை பல மொழிகளில் எமக்கு கிடைக்கின்றது. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் குருதேவரின் துறவிகள் அதிநவீன கொம்பியூட்டர்களின் துணையுடன் பல நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகின்றனர். அமெரிக்காவிலும், மலைத்தேசங்களிலும் பல இந்துக் கோயில்கள் உருவாக குருதேவர் மூலகாரணமாக இருந்துள்ளார். உலகெங்கும் கோயில்களைக் கட்டி வரும் இந்து சமூகத்தினருக்கு ஆலோசனைகளை வழங்கியும் இடையிடையே இந்தக் கோயில்களுக்கு நேரில் சென்றும் குருதேவர், அவர்களை வழிநடத்தி வந்துள்ளார். 1982ஆம் ஆண்டு குருதேவர்


கோப்பாயில் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டத்தை நிறுவினார். 1983இல் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின் குருதேவர் இலங்கைத் தமிழர் அகதி நிவாரண நிதியை உருவாக்கி அதன்மூலம் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கியுள்ளார். குருதேவர் இந்துக் கலாசார அறக்கட்டளை என்னும் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் மூலம் அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சமய ஸ்தாபனங்கள் போன்றவற்றுக்கு உதவி வந்துள்ளார். 1986இல் புதுடில்லியில் கூடிய உலக சமய பாராளுமன்றம் குருதேவரின் உலகளாவிய சமயப்பணியைப் பாராட்டி அவருக்கு "ஜகதாச்சாரியர்" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் உயர்திரு ஊத்தான் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் வழங்கப்படும் சமாதானப்பரிசு 2000இல் குருதேவருக்கு வழங்கப்பட்டது. இத்தருணம் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மகாநாட்டிலும் குருதேவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

குருதேவர் 12.11.2001 திங்கட்கிழமை நள்ளிரவு 11.54 மணிக்கு சித்திரை நட்சத்திரத்தில் ஹவாயில் உள்ள தனது சைவ ஆதீனத்தில் துறவிகள் முன்னிலையில் மகாசமாதி அடைந்தார். குருதேவரின் திருமேனி தகனம் செய்யப்பட்டு அஸ்தி ஆதீனத்தில் உள்ள சிவ நடராஜரின் சன்னிதியின் கீழே ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குகையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மகாசமாதியடையும்போது தனது அடியவர்களிடம் குருதேவர் தான் இந்த உடலை விட்டு நீங்கினாலும் தினமும் இருபத்துநான்கு மணிநேரமும் அகவுலகிலிருந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பேன் என்று கூறினார். குருதேவர் ஆரம்பித்த சிவப்பணிகளை ஆதீனத்துத் துறவிகள் தொடர்ந்து வருகின்றனர். மேன்மை கொள் சைவ நீதி உலகமெல்லாம் விளங்க வைத்த குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் திருவடி போற்றி!

**- ரிஷி தொண்டுநாதன்**

*************************************************************

## சாந்த சுவாமிகள்



சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற சீடர்களுள் ஜேம்ஸ் ராம்ஸ்போதம் என்ற இயற்பெயருடைய சாந்த சுவாமிகளும் ஒருவராவார். இவர் 1915ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி இங்கிலாந்தில் பிறந்தவர். இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இறுதி ஆளுநராகப் பதவி வகித்த சோல்பரி பிரபுவின் புதல்வர் இவர்.

கிறிஸ்தவரான ஜேம்ஸ் ராம்ஸ்போதம், ஈட்டன் கல்லூரியில் படிப்பை முடித்த பின், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மாக்டெலன் கல்லூரியில் மெய்யியல் துறையில் படித்துப் பட்டம் பெற்றார். இரண்டாம் உலக யுத்த காலத்தில் ரிமீ என அழைக்கப்படும் றோயல் மின்னியல் பொறிமுறை பொறியியலாளர் நிறுவனத்தில் பணியாற்றினார். 1949 ஏப்ரல் மாதம் ஆந்தியா மார்க்ரெட் வில்ட்டன் என்பவரை திருமணம் செய்து கொண்டார். மறுவருடம் (1950) ஜூன் மாதம் இவரது மனைவி காலமானார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள திருத்தலங்கள், மடங்கள் என்பவைகளுக்கு யாத்திரை மேற்கொண்டார். பின்னர் தந்தையார் ஆளுநராகவிருந்த இலங்கையைப் பார்ப்பதற்காக வருகைதந்தார். இங்குள்ள பௌத்த மடங்கள், கதிர்காமம், செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்களுக்கும் சென்றார். சிவயோக சுவாமிகள் தங்கியிருந்த கொழும்புத்துறைக்கும் வந்தார். சிவயோக சுவாமிகள் மீது பக்திகொண்டிருந்த நரிக்குட்டி சுவாமிகள், ஜெர்மன் சுவாமிகள் என போற்றப்பட்ட இருவருமே ஜேம்ஸ் ராம்ஸ் போதத்தை இங்கு அழைத்து வந்திருந்தனர். இவர்கள் இருவரும் "கவர்னர் ஜெனரலின் மகன்" என அறிமுகம் செய்தனர். அப்போது சுவாமிகள் "உனது கவர்னரும் நான், ஜெனரலும் நான்" எனக்கூறி அவரை தம் ஞானப் புதல்வராக அரவணைத்தார்.

சிவயோக சுவாமிகள் ராம்ஸ்போதம் அவர்களுக்கு பைபிள் வாசகங்களின் அடிப்படையில் ஞான உபதேசம் செய்தார். இவர், சாந்த சுவாமி என்ற தீட்சாநாமத்தைப் பெற்றுக் கொண்டார். கொழும்புத்துறை ஆச்சிரமத்திலும், மார்க்கண்டு சுவாமிகள் தங்கியிருந்த கைதடி ஆச்சிரமத்திலும், செங்கலடி சிவதொண்டன் நிலையத்திலும், சாந்த சுவாமிகள் தங்கியிருந்தார்கள். இந்த காலப் பகுதியில், சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைகளை ஆங்கில மொழியில் நூலுருப் பெறுவதற்கு இவர் பெரிதும் உதவியிருந்தார். இந்நூலுக்குரிய முன்னுரையையும் இவரே எழுதியிருந்தார்.

சிவயோக சுவாமிகள் தனக்குச் சொன்ன அருள்மொழிகளுடன், ஏனைய தொண்டர்களுக்கும் வழங்கிய அருள்மொழிகளையும் சேர்த்து Words of our Master என்ற பெயரில் நூலொன்றை சாந்த சுவாமிகள் எழுதியிருந்தார். சில காலத்தின் பின் இங்கிலாந்து திரும்பிய இவர், சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைகளை வெளிப்படுத்தும் வகையிலான இரு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 12ஆம் திகதியன்று தனது 89ஆவது வயதில் மகா சமாதியடைந்தார்.

## செல்லத்துரை சுவாமிகள்



சிவயோக சுவாமிகளின் துறவறச் சீடர்களுள் இவரும் ஒருவர். இவர் நீர்வேலி கிராமத்தில் 1914 ஏப்ரல் 7ஆம் திகதியன்று பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்றார். ஆசிரிய பதவிக்கு தெரிவாகி கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றார். தொடர்ந்து ஆசிரியராகவும், பின்னர் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். இருபத்தைந்து வருடகால ஆசிரியப் பணியின் பின்னர் தனது 51ஆவது வயதில் தாமாக விரும்பி ஓய்வுபெற்றார்.

இவர் ஆசிரியப் பணியிலிருந்த காலத்தில் ஆன்மீக விஷயங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். உலகப் பற்றுக்களினின்றும் மெல்ல மெல்ல விடுபடத் தொடங்கினார். சிவயோக சுவாமிகளின் தொடர்பும் கிடைத்தது. கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி ஆகிய தலங்களுக்குச் சென்று தரிசித்தும் வந்தார். இந்தியாவிற்கு திருத்தல யாத்திரைகளையும் மேற்கொண்டுள்ளார்.

இவர் 1954 ஆம் ஆண்டு ஆனி உத்தர தரிசனத்தின் பொருட்டு இந்திய யாத்திரை சென்றபோது திருக்கேதாரத்தில் தங்கியிருந்துள்ளார். அங்கு சிவயோக சுவாமிகள் நிதர்சனமாகத் தோன்றி "வீட்டுக்கு விரைந்து வா" என்று அழைத்தாராம். செல்லத்துரை சுவாமிகள் உடனடியாகவே யாழ். கொழும்புத்துறைக்கு வந்து சிவயோக சுவாமிகளை சந்தித்துள்ளார். அப்போது செல்லத்துரை சுவாமிகள் நாவற்குழி பாடசாலையின் தலைமை ஆசிரியராகவிருந்தார். "உத்தியோகத்துடன் சிவதொண்டன் நிலையத்தையும் பார்த்துக் கொள்" என்று சொல்லி யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையப் பொறுப்பையும் சிவயோக சுவாமிகள் செல்லத்துரை சுவாமிகளிடம் ஒப்படைத்திருந்தார். யாழ். சிவதொண்டன் நிலையம் 1953ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிவயோக சுவாமிகளால் உருவாக்கப்பட்டது. செல்லத்துரை சுவாமிகள் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் சிவதொண்டன் நிலையத்தில் சிவதொண்டு புரிந்துள்ளார்.

1953ஆம் ஆண்டில் சிவயோக சுவாமிகளால் தொடக்கி வைக்கப்பட்ட 'சிவதொண்டன்' என்ற திங்கள் வெளியீட்டின் பொறுப்பையும் செல்லத்துரை சுவாமிகள் ஏற்றுக்கொண்டார்.

சிவயோக சுவாமிகளின் விருப்பத்திற்கு அமைய கிழக்கு மாகாணம் செங்கலடியில் 1964ஆம் ஆண்டில் சிவதொண்டன் நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டது. யாழ். சிவதொண்டன் நிலையத்தில் பணியாற்றி வந்த செல்லத்துரை சுவாமிகள் 1977 ஆம் ஆண்டு முதல் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 2002ஆம் ஆண்டுவரை இங்கு கடமையாற்றியுள்ளார். சுவாமிகள் செங்கலடியில் இருந்த வண்ணம் யாழ். சிவதொண்டன் நிலையத்தையும் கவனித்து வந்தார். மீண்டும் 2002இல் யாழ். திரும்பி சிவதொண்டன் நிலையப் பணியை பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து மறையும் வரை இங்கு கடமையாற்றினார்.

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை தொகுப்பு நூல்களை வெளியிட்டதில் செல்லத்துரை சுவாமிகளின் பணி பெரிதும் போற்றப்படத்தக்கது. எங்கள் ஆசான் அருள்மொழிகள், யோகர் சுவாமிகளின் வாழ்க்கையும் வழிகாட்டலும், சிவசிந்தனை, திருவாசகம் போன்ற பல நூல்களும் சுவாமிகளின் பங்களிப்புடன் வெளிவந்திருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

செல்லத்துரை சுவாமிகள் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதியன்று இறைவன் திருப்பாதம் சென்றடைந்தார்.

**********************************************************

## ஜேர்மன் சுவாமிகள்



யோகர் சுவாமிகளின் அருள் பெற்ற ஞானிகளுள் ஒருவராகப் போற்றப்படும் ஜேர்மன் சுவாமிகள் 1907ஆம் ஆண்டில் ஜேர்மனிய நாட்டில் பிறந்தார். இவரது இயற்பெயர் பீற்றர் என்பதாகும். இவர் இளம் வயதிலேயே ஆன்மீகதாகம் கொண்டவராக விளங்கினார். இந்து மதம் தொடர்பான விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் பெரு விருப்புடையவராக இருந்தார். இதன் காரணமாக 1930ஆம் ஆண்டு 23ஆவது வயதில் இந்திய யாத்திரையை மேற்கொண்டார்.

இந்தியாவில் உள்ள பல தலங்களுக்கும் யாத்திரை செய்தார். பல ஞானிகளையும் குருமார்களையும் சந்தித்து தரிசிக்கக்கூடிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இந்தியாவில் பல இடங்களுக்குச் சென்றிருந்தும் பலரை சந்தித்திருந்தும் திருப்தியடையாத பீற்றர் பின்னர் இலங்கையை வந்தடைந்தார். ஆரம்பத்தில் தென்னிலங்கையில் வாழ்ந்து வந்த ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த புத்த குரு ஒருவருடன் இணைந்து கொண்டு பௌத்த மதத்தை பற்றிய விஷயங்களைக் கற்றுக்கொண்டார்.

இவர் பௌத்த சமயத்தைப் பற்றி கற்றறிந்த போதிலும், அதிலும் திருப்தியடையாத நிலையில் மீண்டும் இந்து சமயத்தை நாடினார். இந்த வேளையில் இலங்கையில் இருந்து கொண்டே பல தடவைகள் இந்திய யாத்திரையை மேற்கொண்டு வந்தார். அப்போது வட இந்தியாவில் இந்து சமய குரு பீடம் ஒன்றினால் பீற்றருக்கு கௌரிபாலா கிரி என்னும் தீட்சா நாமம் வழங்கப்பட்டது.

ஆன்மீக ரீதியாக ஒரு உயர்நிலையை பெற்றுக் கொண்ட பீற்றர் எனப்படும் கௌரிபாலா கிரி அவர்களை மக்கள் ஜேர்மன் சுவாமிகள் என அழைக்கலாயினர். இந்த நிலையிலும் ஒரு குருவை அடைந்து அவர் வழி செல்ல வேண்டும் என்று அவருக்கு ஆன்மீகத் தாகம் ஏற்பட்டது. இவர் விரும்பியது போலவே அவரது ஞான வாழ்க்கையில் பெரியதொரு மாற்றத்தினை ஏற்படுத்திய நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

ஒருநாள் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா புத்தகசாலையில் ஜேர்மன் சுவாமிகள் நூல்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் பின்னால் நின்றிருந்த நரைத்த சடை முடியும் தாடியும் கொண்ட முதியவர் ஒருவர் ஜேர்மன் சுவாமிகளின் கையிலிருந்த நூல்களைப் பறித்தெடுத்து "அட முட்டாளே! நீ தேடும் விடயம் புத்தகத்தில் இல்லை." எனக் கூறி "சும்மா இரு" என்ற வேத வாக்கியத்தை அருளினார். அந்த முதியவர்தான் யாழ்ப்பாணத்து மாமுனிவரான சிவயோக சுவாமிகள். இவருக்கும் ஜேர்மன் சுவாமிகளுக்கும் இடையிலான முதல் சந்திப்பு இதுதான். பல ஆண்டுகளாக தான் தேடிய குருவை பெற்றுக் கொண்ட திருப்தியுடன் சிவயோக சுவாமிகள் அருளிய "சும்மா இரு" என்ற வேத வாக்கியத்தில் திழைத்து வாழ்ந்தார் ஜேர்மன் சுவாமிகள். சும்மா இரு என்ற வாக்கியத்தை தனது கையில் பச்சை குத்தி அதன் மூலம் ஆத்ம திருப்தியடைந்தார்.

சிவயோக சுவாமிகளால் அருளப் பெற்ற "சும்மா இரு" என்ற வாசகத்தின் அர்த்தத்தினை பல சித்தர்களது நூல்களை வாசித்து ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் ஜேர்மன் சுவாமிகள் பெரிதும் ஈடுபட்டு அதனைத் தம் வாழ்நாள் சேவையாகக் கொண்டிருந்தார்.

ஜேர்மன் சுவாமிகள் கதிர்காமத் திருத்தலத்தின் மீது ஈர்ப்புக் கொண்டு பல ஆண்டுகள் கதிர்காமத்திலும் தங்கியிருந்துள்ளார். அதன் பின் தனது வாழ்நாளின் இறுதிக்காலத்தில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சுற்றாடலில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். அவ்வேளையில் கதிர்காமத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டு வந்துள்ளார். இவர் 1984ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று மகா சமாதி நிலையடைந்தார்.

## நரிக்குட்டி சுவாமிகள்



சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற ஞானிகள் வரிசையில் இன்னொருவர்தான் நரிக்குட்டி சுவாமிகள். 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அவுஸ்திரேலியா நாட்டில் பிறந்த இவரது இயற்பெயர் வரி ஓவன் வின்சர் (Varry Owen Winsor). சிறுவயதிலேயே தாயாரை இழந்து வாழ்ந்தமையால் வாழ்க்கையின் நிலையில்லாத தன்மையைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார். இவர் பத்தொன்பது வயது இளைஞராக இருந்த வேளையில் கட்டடக் கலைத்துறைப் படிப்பை மேற்கொண்டார்.

அப்போது வின்சரின் ஆசிரியராக இருந்த ஒருவர் வேதாந்த தத்துவ உண்மைகளையும் கீழைத்தேய கலாசார நடைமுறைகளைப் பற்றியும் இவருக்கு போதித்து வந்தார். அதேவேளையில் இலங்கையின் பேரறிஞரான கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்களது நூல்களை வாசித்து அவற்றிலுள்ள விஷயங்களையும் ஆழமாகக் கற்றறிந்து கொண்டார்.

வின்சர் 1950ஆம் ஆண்டில் முதன் முதலாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அப்போது கதிர்காமம் சென்றபோது அங்கு தங்கியிருந்த ஜேர்மன் சுவாமிகள் என அழைக்கப்பட்ட சுவாமி கௌரிபாலா அவர்களை சந்தித்தார். ஜேர்மன் சுவாமிகளுடன் தங்கியிருந்து அவருக்கு பணிவிடை செய்து வந்த மூதாட்டி ஒருவர் வின்சரை அன்புடன் "குட்டி" என அழைத்து வந்தார். காலப்போக்கில் இப்பெயர் மாற்றமடைந்து "நரிக்குட்டி சுவாமி" என எல்லோராலும் அழைக்கப்படலாயிற்று.

நரிக்குட்டி சுவாமிகள் கதிர்காமத்தில் தங்கியிருந்த வேளையில் ஜேர்மன் சுவாமிகள் ஊடாக சிவயோக சுவாமிகளைப்பற்றி அறிந்து கொண்டார். அவுஸ்திரேலியாவிலிருந்து தனது குடும்பத்தினருடனான பூர்வீகத் தொடர்புகளை முற்றாகத் துண்டித்துக் கொண்ட நிலையில் ஒருநாள் சிவயோக சுவாமிகளை தரிசிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

சிவயோக சுவாமிகள் இவரை சந்திக்காத நிலையில் போகும்படி சொல்லிவிட்டார். இவ்வாறு பல தடவைகள் இவரைக் கலைத்த போதும் அடிக்கடி சிவயோக சுவாமிகள் அருகே வந்து அவரை தரிசித்து வந்தார். சிவயோக சுவாமிகளின் போதனைகளில் மூழ்கிய நரிக்குட்டி சுவாமிகள் திரிகரணசுத்தியை பேணியதோடு சுவாமிகள் போதித்த மௌன நிலையைக் கையாண்டார்.

தமிழ்மொழியை ஆழமாகப் படித்த நரிக்குட்டி சுவாமிகள் அதில் பாண்டித்தியம் பெற்றார். சிவயோக சுவாமிகளை தனது குருவாகவும் பெற்றுக்கொண்டார்.

தனது குருநாதரான சிவயோக சுவாமிகள் மகா சமாதியடைந்த பின்னரும் சிலகாலம் இலங்கையில் வாழ்ந்த நரிக்குட்டி சுவாமிகள் 1966ஆம் ஆண்டு இந்தியா சென்று அங்குள்ள புண்ணியதலங்களுக்கு பாதயாத்திரை மேற்கொண்டு வந்தார். இறுதியாக திருவண்ணாமலையால் ஈர்க்கப்பட்ட அவர் 1970ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் தனது வசிப்பிடத்தை அமைத்துக் கொண்டார்.

திருவண்ணாமலையிலிருந்து தனது தவவாழ்க்கையை மேற்கொண்டு வந்த நரிக்குட்டி சுவாமிகள் 1994ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் மகா சமாதியானார்.

********************************************************

## சந்திரபாலா சுவாமிகள்



யாழ்ப்பாணத்து மாமுனிவராகப் போற்றப்பட்ட சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற ஞானிகளுள் சந்திரபாலா சுவாமிகளும் ஒருவராவர். இவரது இயற்பெயர் கலாநிதி சேர்ஜியோ றேனட் டீலா பெரீரர் (Dr.Sergio Raynaud dela Ferriree) என்பதாகும். இவர் 1916ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். கல்வியறிவு மேம்பட்ட குடும்பத்தில் பிறந்த கலாநிதி சேர்ஜியோ தனது சொந்த நாட்டில் பல சமூகநல ஸ்தாபனங்களை உருவாக்கியிருப்பதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாகவும் பல சேவை நிறுவனங்களை ஸ்தாபித்து பெரும் பணி ஆற்றியிருக்கிறார்.

ஆன்மீக விஷயங்களில் நாட்டம் கொண்ட கலாநிதி சேர்ஜியோ 1950ஆம் ஆண்டில் ஞானமார்க்கப் பயணமாக இந்தியா சென்று அங்கு நடந்த கும்பமேளா நிகழ்வில் கலந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு வருகை தந்த அவர் யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார். அப்போது இங்கிருந்த கலைப்புலவர் நவரத்தினம் என்ற பிரபல கல்விமானை சந்திக்க நேர்ந்தது. இவர் தத்துவஞானி கலாநிதி சேர்ஜியோ அவர்களை சிவயோக சுவாமிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சிவயோக சுவாமிகளின் ஞானோபதேசங்களைக் கேட்ட சேர்ஜியோ அவர்களுக்கு சுவாமிகள் மீது பற்றுணர்வு ஏற்பட்டது. அது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை தோற்றுவிப்பதற்கும் காரணமாக அமைந்துவிட்டது. அவர் உலக வாழ்க்கையை துறந்து தெய்வீகப் பணியாளரானார். அந்த பிரான்ஸிய தத்துவ ஞானிக்கு சிவயோக சுவாமிகள் ஆசி வழங்கி "சந்திரபாலா" என்ற நாமாகரணமும் சூட்டி வைத்தார்.

நாடு திரும்பிய இவர் சந்திரபாலா சுவாமிகளாகப் போற்றப்பட்டார். தென் அமெரிக்காவின் வெனிஸ்வேலா நகரத்தில் தலைமையகத்தைக் கொண்ட ஒரு ஞான இயக்கத்தினை சந்திரபாலா சுவாமிகள் தொடக்கி வைத்துள்ளார். சர்வ மகா சகோதரத்துவம் (Universal Great Brotherhood) என்ற பெயரிலான அந்த ஞான இயக்கத்தின் பிரதான நிலையங்கள் தென் அமெரிக்காவில் அமைந்துள்ளன. சந்திரபாலா சுவாமிகளின் பெருமளவு பக்தர்கள் ஸ்பானிய மொழி பேசுபவர்களாக இருந்திருக்கிறார்கள்.


சந்திரபாலா சுவாமிகள் தென் அமெரிக்கா முதலான உலக நாடுகளில் பல சீடர்களை தோற்றுவித்திருக்கிறார்கள். அங்கெல்லாம் சமூக சேவைகளுடன் யோகாசனம், தியானம் போன்றவைகளிலும் ஈடுபட்டிருந்ததுடன், ஏனையோரையும் அதில் பங்குகொள்ள வைத்தவர். இதனூடாக மனித மேம்பாட்டுக்கு பெரிதும் உழைத்து வந்தவர்.

தென் அமெரிக்காவிலுள்ள பேரு நாட்டின் தலைநகரான லிமாவில் சந்திரபாலா சுவாமிகளின் பிரசார நிலையங்கள் பல இயங்கி வருகின்றன. சிவயோக சுவாமிகளது அருள்பெற்ற ஞானியான சந்திரபாலா சுவாமிகள் 1962ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 27ஆம் திகதியன்று மகா சமாதியடைந்தார்.

சந்திரபாலா சுவாமிகள் மறைவுக்குப் பின்னரும் சுவாமிகளது சீடர்கள் அவரது பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர். சுவாமிகள் தொடக்கி வைத்த ஞான இயக்கம் மற்றும் ஆச்சிரமம் என்பன வெளிநாடுகளிலும் இப்போது இயங்கி வருகின்றன. இவற்றின் ஊடாக சிவயோக சுவாமிகளின் ஆன்மீகத் தாக்கம் அங்கெல்லாம் பரவி பெரும் வெற்றிகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

********************************************************

## வடிவேல் சுவாமிகள்



சிவயோக சுவாமிகளின் அருள்பெற்ற ஞானிகளுள் இன்னொருவர்தான் வடிவேல் சுவாமிகள். இவர் 1906ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதியன்று இணுவில் கிராமத்தில் பிறந்தார். இங்குள்ள பாடசாலையொன்றில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். அவ்வேளையில் வைத்திலிங்க உபாத்தியாரிடமும், மாணிக்கத்தியாகராசாவிடமும் தனிப்பட்ட முறையிலும் கல்வி பயின்று வந்தார். மாலை வேளைகளில் சேதூர் சட்டம்பியாரிடம்

நிகண்டு, நன்னூல், இலக்கண நூல்கள், ஆத்திசூடி முதலான நீதி நூல்களையும் கற்றார்.

இளம் வயதிலேயே இவரின் நடை முறைகளைப் பார்த்த சிலர், இவரது தகப்பனாரிடம் "இது ஒரு ஞானக்குழந்தை. இதை இங்கு வைத்து விளையாடக்கூடாது. சிவயோக சுவாமிகளிடம் அழைத்துச் சென்று அவர் சொற்படி செய்வது நல்லது" என்று சொன்னார்கள். அதன்படி தகப்பனார் பிள்ளையுடன் சிவயோக சுவாமிகளை சென்று சந்தித்துள்ளார். பிள்ளையை கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடத்திற்கு அழைத்துச் செல்லும்படி சிவயோக சுவாமிகள் கூறியுள்ளார்.

அதன்படி, இவரது தகப்பனார், பிள்ளையை வேதாந்த மடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு குருமுதல்வராகவிருந்த மகாதேவா சுவாமிகள் சிறுவனாகிய வடிவேலை அங்கு தங்கவைத்து வேதாந்த சாஸ்திரங்கள், ஞானநூற் கருத்துக்கள் என்பனவற்றை கற்பித்துள்ளார். மகாதேவா சுவாமிகளின் பெரும் பற்றுக்குரியவராக வடிவேல் விளங்கினார்.

இதன்பின்னர், சிவயோக சுவாமிகள் வடிவேலருக்கு ஞானதீட்சையளித்து இவரது பக்குவ நிலையை தெளிவுபடுத்திவிட்டார். இவர் வடிவேல் சுவாமிகளாக பலராலும் போற்றப்பட்டார். ஞானநிலைக்கு வழிகாட்டிய மகாதேவா சுவாமிகளையும், ஞான நிலையடையச் செய்த சிவயோக சுவாமிகளையும் தன் குருநாதர்களாகப் போற்றித் துதித்தார்.

இவர், தனது குருநாதர்களுள் ஒருவரான மகாதேவா சுவாமிகளது பெயரில், கிளிநொச்சியில் ஆச்சிரமம் ஒன்றை ஸ்தாபித்தார். இன்றும் அந்த ஆச்சிரமம் இறைபணிசெய்து வருகின்றது.

வடிவேல் சுவாமிகள் திருமுறைப்பாடல்களை பண்ணுடன் பாடக்கூடிய திறமை வாய்ந்தவர். இவர் ஒரு புலவரும் கூட. பெருமளவு பாடல்களை இயற்றியுள்ளார். இவர் 1990 ஜூன் 26ஆம் திகதியன்று ஆனி மாதத்து ஆயிலிய நட்சத்திர தினத்தில் மகா சமாதியடைந்தார்.

## உள்ளத்திருத்தல்

உள்ளத் தாமரைக் கோயி லிருப்பான்
உயர்கொ ழும்புத் துறையி லிருப்பான்
கள்ள மற்ற கருத்துட னேதனைக்
காதலிப்பவர் இல்லத் திருப்பான்
உள்ளப் பதைப்புகள் எல்லா மகற்றி
உய்யும் நெறியினை ஓயாது காட்டி
மெள்ள அன்பரை மேம்படச் செய்வான்
வீண்சொ லொன்றும் விளம்பிட வையான்!

– பண்டிதவித்துவான் க.கி.நடராஜன்

## ஹவாய் சைவ ஆதீன இன்றைய முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள்



தவத்திரு சிவயோக சுவாமிகளின் அருளாசிபெற்ற சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகளால் 1970ஆம் ஆண்டில் அமெரிக்கா ஹவாய் தீவில் ஆரம்பிக்கப்பட்ட சைவ ஆதீனம், இன்று உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இந்த சைவ ஆதீனத்தின் ஸ்தாபகரும், முதலாவது குருமுதல்வருமான சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகள் 2001 நவம்பர் 12ஆம் திகதியன்று மகா சமாதியடைந்த பின்னர், இரண்டாவது குருமுதல்வராகப் பொறுப்பேற்று ஆதீனத்தை வழிநடத்திவருகிறார் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள். சிவயோக சுவாமிகளின் 55 ஆவது குருபூசை நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஆதீன துறவிகள் உட்பட உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 55 அடியவர்களுடன் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

சுவாமிகள் கடந்த வருடமும் இதே காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்து கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்



அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தில் ஆன்மீகப் பணியாற்றிவரும் துறவிகளுள் யாழ். கோப்பாயைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் ஒருவராவார். இவர், ஹவாய் சைவ ஆதீனத்தின் ஸ்தாபகரும், முதலாவது குருமுதல்வருமான சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகள் காலத்திலேயே, ஆதீனத்தில் இணைந்து கொண்டதுடன், சுவாமிகளது முக்கிய சீடர்களுள் ஒருவராகவும் விளங்கினார்.

ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஹவாய் சைவ ஆதீனத்தில் ஆன்மீகப் பயிற்சி பெற்றவர். இவர் அமெரிக்காவில் மட்டுமல்ல, நம்நாட்டுக்கும் வருடந்தோறும் வருகை தந்து சமய, சமூகநலப் பணிகளை ஆற்றிவருவதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## நல்லூரானைப் போற்றும் சிவயோக சுவாமிகள்



நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே!
இரவு பகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனடி - கிளியே!
நல்லூரான் தஞ்சமடி

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமடி



எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி

## குருநாதனைப் போற்றும் சிவயோக சுவாமிகள்

கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடாநீ யென்றான் அவன்.

தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் - சந்நிதியில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து.

வண்டுபன் செய்யும் வளம்பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் - கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடாபற் றென்றான் சிரித்து.

கன்னலொடு செந்நெல் கதலிபலா மாவர்க்கந்
துன்னு நல்லூர்ச் சாமி திருமுன்றில் - மன்னுசீர்த்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
சீரடியார் சூழ்ந்து நின்றார் தேர்.

அயலறியா வந்தணர்க ளான்றநல் லூர்ப்பதியிற்
கயற்கணார் காமவலை சேரா - வியல்புடைய
செல்லப்ப னென்னுஞ் சிவகுருவை நான் கண்டேன்
நல்லதப்பா வென்றான் நயந்து.

ஒன்றோ விரண்டோ வொருமூன்றோ வென்றெவரும்
அன்றுதொட் டின்றுவரை யாராய - ஒன்றுக்கும்
எட்டாமல் நின்றா னெழிற் குருவாய் நல்லூரிற்
பட்டமளித் தானெனக்குப் பார்

## சிவயோக சுவாமிகளது திருவுருவச் சிலையின் உலக யாத்திரை

கொழும்புத்துறையில் ஒரு குடிசையமைத்து தங்கியிருந்த சிவயோக சுவாமிகளை தரிசிப்பதற்கு பலர் வந்து போவது வழக்கம். அமெரிக்காவில் இருந்து வந்திருந்த இருபத்தியிரண்டு வயது இளைஞர் ஒருவர் சிவயோக சுவாமிகளிடமிருந்து ஞானோபதேசம் பெற்றுக் கொண்டதால் இவரது சீடராகிவிட்டார். இவரே சுப்பிரமுனிய சுவாமிகள் என பின்னாளில் பலராலும் போற்றப்பட்டவர். இவர் அமெரிக்க மாநிலத்தின் ஹவாய் தீவில் சைவ ஆதீனத்தை நிறுவி சிவயோக சுவாமிகளின் ஆன்மீக இறைபணியை முன்னெடுத்துச் சென்றதுடன் ஒரு சீடர் பரம்பரை உருவாகுவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

சுப்பிரமுனிய சுவாமிகள் தனது குருநாதரான சிவயோக சுவாமிகளின் 125ஆவது பிறந்தநாளான 1997ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதியன்று ஹவாய் சைவ ஆதீனத்தில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தார். சிவயோக சுவாமிகளின் சிறிய திருவுருவ வெண்கலச் சிலையொன்றை அமைப்பித்து அதற்கு பூசை வழிபாடுகள் செய்யப்பட்டன. பக்திபூர்மான வகையில் நடந்த அந்த நிகழ்வைத் தொடர்ந்து சிவயோக சுவாமிகளின் வெண்கலச் சிலையை உலக யாத்திரைக்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகளும் நடந்தேறின. சுப்பிரமுனிய சுவாமிகள் ஆசிவழங்கி சிவயோக சுவாமிகளின் திருவுருவ உலக யாத்திரையை ஆரம்பித்து வைத்தார். உலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் தரிசனத்திற்காகவும் அதன்மூலம் அவர்கள் இறையுணர்வையும் ஆன்மீக சிந்தனையையும் பெறும் வகையிலும் சிவயோக சுவாமிகளின் திருவுருவ உலக யாத்திரை அமைந்திருந்தது. இந்த உலக யாத்திரையின்போது கோலாகலமான நிகழ்ச்சிகள் எதுவும் இடம்பெறக்கூடாது என்பதுடன் யாத்திரை செல்லும் பாதைகளில் மக்களது பக்திப் பெருக்கும் ஆன்மீக உணர்வும் மேலோங்கியிருக்க வேண்டும் என்பதுவும்

சுப்பிரமுனிய சுவாமிகளின் பெருவிருப்பமாகவும் அறிவுரையாகவும் இருந்தது.

சிவயோக சுவாமிகளின் திருவுருவ உலக யாத்திரையானது அமெரிக்காவின் ஹவாயிலிருந்து ஆரம்பமாகி ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் முதலாக உலகத்தின் பெரும் பகுதியைக் கடந்து 2014 ஆம் ஆண்டில் ஆசியாவுக்குள உட்பிரவேசித்தது. உலக யாத்திரையாகக் கொண்டுவரப்பட்ட சிவயோக சுவாமிகளின் திருவுருவ வெண்கலச்சிலை அவரது ஐம்பதாவது குருபூசை நாளன்று (10.04.2014) யாழ்ப்பாணம் வந்தடைந்தது. இப்போது இந்த திருவுருவச் சிலை கீரிமலையிலுள்ள சிவபூமி மடத்தில் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சித்தர் சிவயோக சுவாமிகளின் அற்புதங்களில் ஒன்று

இந்தியா, தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அ.சஞானசம்பந்தன் அவர்கள் பலருக்கும் அறிமுகமானவர். ஒருதடவை அவரது வாழ்வில் ஏற்பட்ட எதிர்பாராத பிரச்சினையொன்றை தனது அருட்சக்தி மூலம் யோகர் சுவாமிகள் நிவர்த்தி செய்த அந்த அற்புதமான நிகழ்வு பற்றி பேராசிரியர் இவ்வாறு சொல்கிறார்.

1955 வாக்கில் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள கரணவாய் தெற்கு என்ற ஊரில் பத்து நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவு செய்வதாக ஒப்புக்கொண்டு சென்றேன். மலாய்நாட்டு ஓய்வூதியம் பெறும் முருகப்பு என்பவர் வீட்டில் தங்கியிருந்தேன். பகல் முழுவதும் வேலையில்லை ஆதலாலும், இரவு ஒரு மணிக்கு சொற்பொழிவு தொடங்குவதாலும் அன்பர்கள் சிலர் எனக்காக ஒரு காரைக் கொடுத்து பகலில் எங்கு வேண்டுமானாலும் போய்வர ஏற்பாடு செய்தார்கள். முதல்நாள் சொற்பொழிவு முடிந்து வழக்கம்போல் சுவாமிகளிடம் சென்று வணங்கி வழிபட்டு இரவு மீண்டுவிட்டேன்.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் பல்தேய்த்துக் கொண்டு நின்றேன். நண்பர் முருகப்பு வாலாயமாகக் கேட்கின்ற "நன்கு உறங்கினீர்களோ ஐயா?" என்ற கேள்வியைக் கேட்டார். அவருக்குப் பதில் கூறத் தொடங்கினேன். ஆனால் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. காற்றுத்தான் வெளிவந்தது. எவ்வளவோ முயன்றும் ஒரு சொல்லைக் கூட உச்சரிக்க முடியவில்லை. அதிர்ந்துபோன நான் என்ன செய்வது என்றறியாமல் திகைத்தேன். ஒன்பது மணியளவில் காரை நானே ஓட்டிச்சென்று சாவகச்சேரியில் ஓய்வு பெற்றிருந்த தொண்டை, காது, மூக்குநோய் நிபுண மருத்துவரைக் காணச்சென்று என் குறையை அவரிடம் எழுதிக் காட்டினேன். அவர் சோதனை செய்துவிட்டு "இன்று மாலை உங்களுடன் ஒருவரை அனுப்புகிறேன். கொழும்பில் சென்று சில சோதனைகள் நடத்திய பிறகு மருத்துவம் செய்யலாம்" என்று கூறினார். அவரிடம் எழுதிக் காட்டும் பொழுது "Paralysis of Vocal Chord" என்று எழுதிக் காட்டினேன். அவருடைய வாக்கை ஏற்றுக்கொண்டு மாலை கொழும்பு போவதற்குத் தயாராக காரில் ஏறி அமர்ந்தேன். கண்ணீர் மாலை மாலையாக வந்தது. காரணம் என் பிழைப்பே வாயின் மூலம்தான் நடைபெற்றது. கல்லூரிப் பேராசிரியர், தொடர்ந்து சொற்பொழிவு செய்பவர் என்ற இரண்டும் போய்விட்டனவே. என்னுடைய பெரிய குடும்பம் என்னாவது என்ற கவலை மனம் முழுவதையும் சூழ்ந்து கொண்டது. இந்த நிலையில் காரை ஆயத்தப்படுத்த சாவியைச் செருகிய நிலையில் அந்த மருத்துவ நிபுணர் வெளியே வந்து காரின் கதவைப் பிடித்துக்கொண்டு, "அ.ச.ஐயா! யோகருடைய சீடர்தானே தாங்கள். அவரைப் போய்ப் பாருங்களேன்" என்றார். அந்த விநாடி வரை சுவாமிகளின் நினைவே என் மனதில் தோன்றவில்லை. அவர் கூறியவுடன் சுவாமிகளிடம் செல்லப் புறப்பட்டேன்.

அக்காலத்தில் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை. அவருடைய தியானம் முதலியவற்றிற்கு இடையூறாக யாரும் போவதில்லை. மாலை ஆறுமணிக்குப் பின்பே செல்வார்கள். அனைவருக்கும் தெரிந்த இந்தச் செய்தி எனக்கும் தெரிந்திருந்தது. எனவே ஒரு விநாடி சிந்தித்து உடனடியாகச் சுவாமிகளிடம் போவதே சரி என்ற முடிவுக்கு வந்தேன். நேரே வண்டியை ஓட்டிச்சென்று ஆச்சிரமத்தின் பக்கத்தில் நிறுத்திவிட்டு எதிரே உள்ள கேணியில் கைகால்களைச் சுத்தம் செய்துவிட்டு மகானின் குடிலுக்குள் நுழைந்தேன். அடக்கமுடியாத அழுகையும், கண்ணீரும் என்னை ஆட்கொண்டிருந்தன. விழுந்து வணங்கிய நான் எழுந்திருக்க விரும்பவில்லை. ஓரிரு நிமிடங்கள் கழித்து "ஏண்டா! பொடியா, அந்த மருத்துவர் என்ன முருகன் என்ற நினைப்பா? எதற்காக அவரிடம் போனாய்?" என்று திட்டியதோடல்லாமல் என்னுடைய அறியாமை பற்றியும் வெகுவாக ஏசினார்கள். கடைசியில் "பொடியா, இங்கே உட்கார்" என்று நான் வழக்கமாக அமரும் இடத்தைக் காட்டினார்கள்.

அப்பொழுது இருந்த மனநிலையில் சுவாமிகள் பேசியது எதுவும் என் மனதிற் பதியவில்லை. ஏதேதோ பேசிவிட்டு அரைமணி கழித்து அவர்கள் சொல்லிய வார்த்தைகளை ஏறத்தாழ அப்படியே கீழே தந்துள்ளேன். ஒரு சில சொற்கள் முன் பின்னாக இருக்கலாம். இத்தனை ஆண்டுகள் கழித்தும் அச்சொற்களை மறக்கமுடியவில்லை. காரணம் என்னுடைய வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய சொற்கள் அவை. "பொடியா, வழக்கம் போல மாலையில் பிரசங்கம் செய்துவிட்டு இங்கே வா" என்று கூறிய சொற்கள் ஒரு பெரிய அதிர்ச்சியைத் தந்தன. அப்படியானால் நான் பேசமுடியும் என்பதைச் சுவாமிகள் குறிப்பாக உணர்த்தி விட்டார்கள். எழுந்து விழுந்து வணங்கிவிட்டு "உத்தரவுப்படியே செய்கிறேன்" என்றேன். அந்த இரண்டு வார்த்தைகள் தான் அப்பொழுது புதிதாக என் வாயிலிருந்து வந்த முதலிரண்டு சொற்கள் ஆகும். என்னை மறந்து அந்தச் சித்த புருஷன் எதிரே நிற்கும்போது திடீரென்று சுவாமிகள் பின்வருமாறு கூறினார்கள். "பொடியா சேக்கிழாரையும் கம்பனையும் நாங்கள் தானே வெட்டிப் புதைக்கணும். கவலையில்லாமல் போய்வா" என்கிறார்கள். இதன் பொருள் என்ன என்பதைப் பின்னர் விளக்குகிறேன்.

வெளியில் வந்து காரை ஓட்டிக்கொண்டு சுவாமிகளிடம் என்னைப் போகுமாறு பணித்த அந்த மருத்துவப் பெருந்தகையைக் காணச் சென்றேன். தெரிவிலிருந்தபடியே "டாக்டர்" என்று பெருங் குரலெடுத்துக் கூவினேன். அந்த முதியவர் வீட்டிலிருந்து வெளியே வந்து சாஷ்டாங்கமாக விழுந்து என்னை வணங்கினார். சற்றும் எதிர்பாராத இதனைக் கண்ட நான் பெரிதும் அதிர்ச்சியடைந்து, "இவ்வளவு முதியவராகிய தாங்கள் என்னைக் கும்பிடலாமா? இது முறையன்று." என்று கூறினேன். என்னுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்ட அவர் உள்ளே அழைத்துச் சென்று அமரவைத்தார். அதேநேரம் அவரது பணியாளர் ஒருவர் இரண்டு விமான டிக்கெட்டுகளைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார். ஏதோ அவருக்கு அந்த டிக்கெட்டு என்று நினைத்தேன். அப்பெருமகனார் டிக்கெட்டை என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை செல்வதற்கு என் பெயரிலும் அப்பணியாளர் பெயரிலும் இரண்டு டிக்கெட்டுகள் இருந்தன. ஒன்றும் புரியாமல் திகைக்கும் என்னைப் பார்த்துப் பின்வருமாறு பேசினார். ''அ.ச ஐயா! இங்கு செய்த சோதனையிலேயே தாங்கள் எழுதிக் காட்டியது உண்மை என்பதைத் தெரிந்து கொண்டேன். இதற்கு இதுவரை மருத்துவ உலகம் ஒன்றும் செய்ய முடியவில்லை. கோடிக்கு ஒருவருக்கு இது வரலாம். வந்து விட்டால் அதுதான் அவருடைய முடிவு. ஆக உங்களிடம் சொல்லாமல் நாளைக்கு உங்களைச் சென்னைக்கு அனுப்ப முடிவு செய்தேன். பேச முடியாத தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் இந்த அன்பரையும் உங்களோடு அனுப்ப முடிவு செய்தேன். காரில் உங்களை ஏற்றுகின்ற வரை எனக்கும் சுவாமிகளின் நினைவு வரவில்லை. எப்படி உங்களை ஊருக்கு அனுப்புவது என்ற எண்ணம்தான் என் மனதில் மேலோங்கி நின்றது. தாங்கள் வண்டியில் ஏறியபிறகு வண்டிக் கதவைத் தொட்டுக் கொண்டு "நீங்கள் சென்று வாருங்கள்" என்று விடை கொடுக்க முயலும்போதுதான் சுவாமிகளின் எண்ணம் திடீரென்று மனதில் தோன்றிற்று. நாற்பது வருடங்களுக்கு மேல் E.N.T மருத்துவராக கொழும்பில் பணி செய்த எனக்கு அந்த விநாடி ஓர் எண்ணம் தோன்றிற்று. மருத்துவ உலகம் உதவ முடியாத தங்களுக்கு இறைவனின் அருள் ஒன்றுதான் உதவமுடியும். அப்படியானால் அந்த அருளை வழங்கக் கூடிய இறைநேசர் சுவாமிகள் ஒருவராகத்தான் இருக்கமுடியும். அதனாற்றான் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை என்று தெரிந்திருந்தும் தங்களைப் போகுமாறு பணித்தேன். சுவாமிகளே என் மனத்தில் அந்த எண்ணத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். இத்தகைய அற்புதங்கள் பலவற்றைப் பிறர் அறியாமல் ஒரு சிலருக்கு சுவாமிகள் செய்கிறார்கள்" என்பதை தழுதழுத்த குரலில் கூறிவிட்டு, என்னை அங்கேயே தங்கி "மதிய உணவு உட்கொண்ட பிறகு போகலாம்" என்று பணித்தார்கள்.


அன்று மாலை வழக்கம் போலப் பேசினேன். பின்னர் சுவாமிகளிடம் சென்று ஆசி பெற்றேன். ஏனைய ஒன்பது நாட்களும் இதே முறையில் சுவாமிகளைச் சென்று தரிசனம் செய்து வந்தேன். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தில் கம்பனைப் பற்றி "இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்" என்ற நூலையும், "நாடும் மன்னனும்" என்ற நூலையும் எழுதி வெளியிட்டிருந்தேன். அதன்பிறகு ஏறத்தாழ முப்பது நூல்கள் எழுதியுள்ளேன். என்றாலும் சுவாமிகளின் வாக்குப் பொய்க்கவில்லை. இந்நூல்களில் முக்கால் பங்கிற்கு மேல் கம்பனையும் சேக்கிழாரையும் பற்றிய நூல்களே ஆகும்.

********************************************************

## சிவயோக சுவாமிகளின் திருவாய்மொழி

### - நான்கு மகா வாக்கியங்கள் -

- செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்
  பொல்லாப் பிலை யென்றான் போற்று
- முழுதுமுண் மையென்று முனிவனவன்
  சொன்னான் எழுத முடியா திதை
- நாமறியோ மென்னும் நறிய திருவாக்குச்
  சேமமுறச் சொன்னான் தெரி
- முடிந்த முடிபென்று முன்னாளிற் சொன்னான்
  அடியார்கள் முன்ன ரவன்





அமெரிக்காவிலிருந்து உலக யாத்திரையாக கொண்டுவரப்பட்ட சிவயோக சுவாமிகளின் திருவுருவ வெண்கலச்சிலை கீரிமலையிலுள்ள சிவபூமி மடத்தில் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டுவருகிறது.

## சிவபூமி முதலாவது பத்திரிகையின் முதற்பிரதியை அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன முதல்வர் போதிநாத வேலன் சுவாமிகளும் அவருடன் வருகைதந்திருந்த சுவாமிகளும் பெற்றுக்கொண்டார்கள்



"அமெரிக்க ஹறாவாய் சைவ ஆதீன முதல்வர்"

**சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தரிசனம்**

இடம்
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்
பழைய வீதி, கோப்பாய்.

காலம்
17.03.2019 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.30மணி


அன்புடையீர், வணக்கம்.

அமெரிக்காவிலுள்ள ஹறாவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 55 அடியவர்கள் சகிதம் ஆன்மீக யாத்திரைக்காக எம் மண்ணுக்கு வருகை தந்துள்ளார். அவர்களை அடியவர்கள் தரிசித்து ஆசி பெறுவதற்கு எமது ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் ஏற்பாடு செய்துள்ளது. இவ்வரிய தெய்வீக நிகழ்ச்சியில் அனைவரும் கலந்துகொண்டு சுவாமிகளின் நல்லாசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


நன்றி.

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்
பழைய வீதி,
கோப்பாய்.

இங்ஙனம்
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச்
சைவச் சிறுவர்கள்






# சிவயோக சுவாமிகளது திருவுருவச் சிலையின் உலக யாத்திரை







சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்
தனது குருநாதரின் திருவுருவச் சிலைக்கு
தீபாராதனை செய்து
யாத்திரையை தொடக்கி வைப்பதையும்
அமெரிக்க இந்து இளைஞர்கள் திருவுருவச்
சிலையை எடுத்துவருவதையும்
2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்
வந்து சேருவதையும் படங்களில் காணலாம்.



## குருநாதர் செல்லப்பா சுவாமிகள்

"ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான் -  கூசாமல்
நின்றேன்நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றேயான் பெற்றே னருள்"

- சிவயோக சுவாமிகள்






யாழ்ப்பாணத்து மாமுனிவர்

## சிவயோகசுவாமிகளின்

### குருபூசையும், பாத யாத்திரையும்

நிகழும் விளம்பி வருடம் 18.03.2019 திங்கட்கிழமை ஆயிலிய நட்சத்திரத்தில் யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகளின் குரு பூசை தினத்தை முன்னிட்டு காலை 8.00 மணிக்கு நல்லூர்த் தேரடியில் இருந்து பாத யாத்திரை ஆரம்பமாகி காலை 9.30 மணிக்கு சுவாமிகளின் கொழும்புத்துறை ஆச்சிரமத்தைச் சென்றடையும். அதனைத்தொடர்ந்து நற்சிந்தனை பாராயணமும், பூசை வழிபாடுகளும் நடை பெறும். அடியவர்கள் அனைவரும் இவ் வழிபாடுகளில் கலந்து கொண்டு சுவாமிகளின் அருளாசிகளைப் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

"அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு"
- சிவயோக சுவாமிகள்

